கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

# நல்லதங்காள்கதை.

இஃது

பூவிருந்தவல்லி,

தங்கவேலுமுதலியாரவர்களால்,

பார்வையிடப்பட்டு.

சென்னை-சூளை.

பு. முனிசாமி நாயுடு

அவர்களது,

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

T010231
Sarasvati Mahal Library. Thanjavur

தருமராஜாகோவில்தெரு நெ. 34. சூளைபோஸ்ட்.

உ

கடவுள் துணை.

# நல்லதங்காள் கதை.

## தோத்திரங்கள்.

### கலிவிருத்தம்.

இந்துவேணிய னீஸ்வரிபொற்பினில்
நந்துவாமிர்த நல்லதங்காள்கதை
முந்துசெந்தமிழ் மொழியவொருகொம்பு
சிந்துரமிகு சேவடிபோற்றியே.

### விநாயகர் துதி.

வேழமுகத்தோனே விநாயகரேமுன்னடவாய்
பேழைவயிற்றோனே பெருமாள்மருகோனே
அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்திக்கணபதியே சரிந்தவயிற்றோனே
கரிமுகப்பிள்ளையாரே கணபதியேமுன்னடவாய்
பிரியமாய்நல்லதங்காள் பெண்ணின்கதைபாட
அறியாதான்நாவதனில் அன்பாய்வருவதற்கு
துரிதமுடனே துணையாகநீவருவாய்
தும்பிக்கையுள்ளவரே துன்பங்கள்வாராமல்
நம்பிக்கைவைத்தேன் நாவிற்குடியிருந்து
ஆனைமுகப்பிள்ளையாரே ஐங்கரனேமுன்னடவாய்
பானைவயிற்றோனே பரமருடபுத்திரனே
பாடவேயெந்தனுக்கு பகவானேயிப்பொழுது.

### சுப்பிரமணியர் துதி.

திருத்தணிகைவேலவனே திருமால்மருகோனே
குருந்துவைத்தஎந்தனைநீ காத்தருள்வேலுமையா
வள்ளிமணவாளா மயேஸ்திரனார்புத்திரனே
புள்ளிமயிலேறும் புண்ணியப்பேரூரா
நல்லதங்காள்கலியாணம் நலமாசப்பாடுதற்கு
புல்லறிவன்என்னாவில் புண்ணியரேநீயிருந்து
கூடத்துணையிருந்து குற்றங்கள்வாராமல்
பாடத்துணையெந்தனுக்கு பகவானேவாக்குரையும்.

### சரஸ்வதிதுதி.

தாமரைசெங்கமலந் தன்னிற்பிறந்தவளே
கோமளசரஸ்வதியே கொம்பனையாள்நல்லதங்காள்

புண்ணியவதிகதையைப் புகழாகப்பாடுதற்கு
எண்ணியிருந்த எளியேனுடநாவில்
தொந்தமாய்பாடுதற்குத் தோகையேயிப்போது
வந்துகுடியிருப்பாய் மறையவனார்தேவியரே
பூவிலுதித்ததொரு பொற்கொடியேயெந்தனுக்கு
நாவிற்குடியிருந்து நடத்துமம்மாயிக்கதையை

கலிச்சந்தவிருத்தம்.

மஞ்சுகுழல்பிஞ்சுமுலை வஞ்சிநல்லதங்காள்
விஞ்சுவரலாறுசொல் மிஞ்சுசிவனார்முன்
கொஞ்சுமுலைமாதுதரு குஞ்சரகணேசன்
செஞ்சரணகஞ்சமல ரஞ்சலிசெய்வாமால்.

கதையின்வரலாறு.

திங்கள்மும்மாரிபெய்யுஞ் சீரானநன்னாடு
எங்குமணிவிளையும் எழிலானநன்னாடு
செஞ்சாலிநெல்விளைந்து செழிக்கும்வளநாடு
தஞ்சாலிறையாமல் தழைக்கும்வளநாடு
நாற்றைப்பிடுங்கிபள்ளர் நன்றாய்விடுவார்கள்
சேற்றைக்குழப்பிபள்ளர் திறமாய்நடுவார்கள்
வயலிற்களைபிடுங்கி மாதர்கள்போடுவார்கள்
கயலென்றுதங்கள் கண்ணை கருதியேதேடுவார்கள்
தோள்மேலெடுப்பார்கள் சுமந்துநடப்பார்கள்
ஆள்மேலெடுப்பார்கள் அசைந்துநடப்பாகள்
கார்நெல்லறுப்பார்கள் களத்தண்டைகொட்டுவார்கள்
வார்கொள்மாட்டைப்பிடித்து வந்துபிணைகட்டுவார்கள்
மாரிநெல்லுதிரும்படி சாய்ந்தேயுழுவார்கள்
இனிதானதொழில்களிலே ஏதுவமுவார்கள்
ஏறடிக்கும்பண்ணையாள்கள் எங்குந்திரிவார்கள்
போரடித்துநெற்படுத்திப் பூசைபுரிவார்கள்
தூங்காப்பெருமைதனைச் சொல்லமுடிபோகாது
பூங்காவனப்பெருமை புகலத்தொடங்கினேன்காண்
துலங்கும்வாழைமரங்கள் இலங்கும்பலாமரங்கள்
குலுங்கும்பாக்குமரங்கள் நலங்கொள்தேக்குமரங்கள்
மாமரச்சோலைகளும் மருதிலுப்பைச்சாலைகளும்
தாமமிருசந்தனமும் தவனமிருநந்தவனம்
தக்கசாமந்திகளும் சண்பகப்பூபந்திகளும்
மிக்ககுயில்பாட வீறுமயிலாட
ஆண்டிகள்தங்குமிடம் அரவிந்தம்பூந்தவிடம்

பாண்டிமகாநாட்டில் பாரமிகவுண்டென்று
முதுவரிளைஞரெல்லாம் முன்னுரைத்தசாஸ்திரத்தில்
மதுராபுரியென்று வாணர்முதல்சொல்வார்கள்
திக்கெட்டுமன்னர்புகழ் தென்மதுரைமாநகரம்
சூழ்வினைதுன்பமெல்லாம் தொலைக்குந்திருநகரம்
வாழ்விக்கும்அட்டசெல்வம் புன்னுந்திருநகரம்
வசுணளரிபிர்மர் வந்திருக்குந்தன்னநகரம்
மீனாட்சிமாதுமையாள் மேவுஞ்சீர்பொன்னகரம்
உப்பரிகைமாளிகையும் உயர்ந்தபெருமாளிகையும்
செப்பரியமாடங்களும் சேர்ந்தசித்திரக்கூட்டங்களும்
செம்பொன்னாற்கோட்டைகளும் திகழுறியபேட்டைகளும்
அம்பொன்னாற்கோயில்களும் அழகானவாயில்களும்
முத்துச்சிவிகையேறும் முடிமன்னர்வீதிகளும்
தத்துப்பரியேறும் தடமன்னர்வீதிகளும்
வேல்கொடுக்கும்மன்னர்பல மேவியவாழ்வீதிகளும்
கோல்கொடுக்கும்வேளாளர் கூர்ந்துவாழ்வீதிகளும்
சாத்திரஞ்சொல்லுகன்ன சதுர்மறையோர்வீதிகளும்
காத்திரஞ்சேர்வாணிபஞ்செய் கனவணிகர்வீதிகளும
கொட்டிதட்டிப்பணிகள்செய்யும் கொல்லர்வாழ்வீதிகளும்
தட்டிப்பணிகள்செய்யும் தட்டாரவீதிகளும்
பதினெட்டுசாதிவகை பலமன்னர்வீதிகளும்
ஆதிபெற்றமதுரையிலே சொல்லவுங்கூடாது
தாரதலத்துமன்னர்களில் சந்திரகுலத்துதித்தோன்
நராதிபனுராமலிங்க நல்லமகாராஜன்
மணிமகுடந்தாங்க மனக்களிப்புமேலோங்கி
அணிமதுரைப்பட்டணத்தை அரசாட்சிசெய்யவென்று
செங்கோல்பிடித்து சிறப்போடரசுரிமை
மங்காதமண்டலத்தை மநுநீதிதப்பாமல்
ஆறிலொருகடமை அரசனுக்குவாங்குவன்காண்
மாறியொருவருக்கும் வாக்குபிசகானே
இந்தப்புவிதனிலே இந்திராணியென்பவளைச்
சுந்தரமாய்த்தாலிகட்டி சுகிர்தமுடனரசில்
சிங்காசனமேறித் தேர்வேந்தன்வீற்றிருந்தான்
அங்காதனத்திருந்த ஆரணசாஸ்திரிமார்
வேதியர்சோதிடரும் வேந்தன்முகம்பார்த்து
நீதியெடுத்து நிகழ்த்தலுற்றார்மன்னனுக்கு
ஒட்டும்நவகோண முலகாளும்வேல்வேந்தே
பட்டந்தனக்குப்பிள்ளை பாராளவில்லையே
தங்களரசுரிமை தாளுளவில்லையே
எங்களரசனே யாங்களென்னசெய்வோமென்றார்
சொன்னமொழிகேட்டுத் தோன்றல்சினமடைந்து

தன்னரசுபட்டமாளத் தான்பிள்ளையில்லையென்று
எண்ணாவிசாரமுட னேக்கமிகவடைந்து
மண்ணாளுஞ்செங்கோல் மந்திரிதனக்கீய்ந்து
மனைவிதனையழைத்து வன்காட்டிடஞ்சென்று
சுனையடர்ந்தமேருவிடந் தோன்றல்மனைவியுடன்
உலகாண்டதைமறந்து ஊமைமௌனியர்போல்
இலகுதிருநீற்றை யெங்குமேதானணிந்து
சலியாதுருத்திராட்சந் தானணிந்துமனைவியுடன்
புலியாசனம்போட்டுப் பொற்பாயிருவோரும்
புல்லும்படியமர்ந்து பூசைவழிபாடு
அல்லும்பகலுமாக வாசையாலேசிவனை
மனதிலிருத்தியே வந்தித்தார்சிந்தையுள்ளே
கனகவுமைமாது கண்டாளிவர்தபசை
பரமசிவனைநோக்கிப் பார்வதியாள்சொல்லுகிறாள்
வரமிகுந்தமாதேவா மாதவத்தைக்கண்டீரோ
பிள்ளைக்குவேண்டுகிற பெருந்தபசைப்பார்த்தீரோ
கொள்ளையிதுவரையிற் குவலயத்தில்கண்டறியோம்
தவசுக்குத்தான்மகிழ்ந்து தக்கமைந்தனைகொடுப்பீர்
சிவபெருமான்கண்டு சிந்தைமகிட்சிகொண்டு
எருதேறியிருவருமே ஏகாந்தமாகவந்தே
விருதுபெறமைந்தன் விரும்பிமிகக்கொடுத்தார்
பெண்ஒன்றுபிள்ளைஒன்று பிறக்கும்படிகொடுத்தார்
மன்னரசன்மனைவியொடு மாதாவைதான்தொழுது
விமலனைப்போற்றிசெய்து வீடுவந்துதான்சேர்ந்தார்
தமக்கிரண்டாண்டுக்குள் தாயார்பிறந்திடவே
தக்கமைந்தனுக்குநல்ல தம்பியென்றுபெயருமிட்டு
ஒக்கநல்லதங்கையென உத்தமியைத்தான்வளர்த்து
பள்ளிக்குவைத்தார்கள் பாலரிருவரையும்
தெள்ளுதமிழ்தெலுங்குந் தேர்ந்தேயுணர்ந்தார்கள்
வில்வித்தையானையேற்றம் மிக்ககுதிரையேற்றம்
கல்விப்பயிற்சியெல்லாம் கற்றுத்தெளிர்ந்தார்கள்
மைந்தன்தனக்கு மணமுடிக்கவேண்டுமென்று
குந்தளதேசமாளும் கோமகன்பெற்றெடுத்த
மூளியலங்காரி மொய்குழலநாயகியை
நாளிட்டுக்கேட்டு நல்லமணமுடிந்தார்
மணமுடித்தபத்தாநாள் மாதாயிறந்துவிட்டாள்
இணையிலிந்திராணிபோகம் இராமலிங்கமகாராஜன்
மனையும்போனவுடன் மைந்தன்தனையழைத்து
தனையன்றனக்காசை தானீய்ந்துசொல்லலுற்றார்
நல்லதம்பியிவ்வுலகை நாளாண்டவாறுபோலே
வல்லமுடிதரித்து மண்ணுலகில்மாந்தருக்கு

குறைவுவாராமலேநீ குடிகளனைவோர்க்கும்
நின்றசெங்கோல்கோணாது நீதிசெலுத்திடுவாய்
உந்தனுடன்பிறந்த உற்றநல்லதங்காளை
எந்நாளும்பசுமை யெய்தியிருக்குமிடம்
ஆராய்ந்துபார்த்து அழகாய்மணமுடித்து
சீராகச்சீதனங்கள் சிந்தைமகிழ்ந்தேயீந்து
அரசாட்சியுலகை யாண்டிருப்பாயென்றுசொல்லி
பிரசமலர்க்கொன்றைப் பெம்மானையுள்ளிருத்தி
இராமலிங்கமன்னவனும் இறந்தவுடன்நல்லதம்பி
கருமாதிகாரியங்கள் கனமாய்முடித்தரசுக்
கொருபோதும்பொல்லாங்கு உலகத்துக்கெய்யாமல்
தேசுபெறச்செங்கோல் செலுத்திமேவாழ்ந்திருக்க
காசிமகாராஜன் கனமதுரைவந்துசேர்ந்து
நல்லதம்பியைநோக்கி நல்லதங்காள்நாயகியை
வல்லமணஞ்செய்ய வார்த்தைமிகப்பேசி
பரியங்கொடுத்தானே பத்துலட்சம்பொன்னிதிகள்
பிரியமுடன்நல்லதம்பி பெண்கொடுக்கவேயிசைந்து

திருக்கலியாணச்சிறப்பு.

சாந்தால்சரிகுழலே சற்குணமேநல்லதங்காள்
நாவிட்டுநாள்முகூர்த்தம் நாடெங்குந்தானறிய
கலியாணம்கலியாணம் எங்களில்கொடிக்கு
சித்திரைமாதத்திலே செல்வக்கலியாணம்
கலியாணமென்றுசொல்லி கடலேறிப்பாக்குவைத்து
மாட்டின்மேல்பாக்கு மனிதர்போகவிட்டார்
சின்னமடிகோலிச் சீமையெங்கும்பாக்குவைத்தார்
பெரியமடிகோலிப் பூமியெங்கும்பாக்குவைத்தார்
பனையின்மரம்பிளந்து பந்தக்கால்சொப்பனிட்டார்
தென்னைமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வன்னிமரம்பிளந்து வாசற்கால்சொப்பனிட்டார்
மூத்துமரம்பிளந்து முகூர்த்தகால்சொப்பனிட்டார்
இட்டார்கள்பந்தல் இருபதிங்காதவழி
தொட்டார்கள்பந்தல் தொண்ணூற்றுக்காதவழி
மூன்னூறுபார்ப்பார்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கிலியம்
அம்பிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலியைக் கழுத்திலேயென்றுரைத்தார்
தாலிதரிப்பதற்குத் தார்வேந்தனைப்பொழுது
அஸ்தமிட்டமங்கிலியம் அவ்வரசன்தான்வாங்கி



நல்லதங்காள் திருக்கல்யாணச் சிறப்பு.

அரகராவென்றுசொல்லி அணிந்தாரேமங்கிலியம்
கன்னித்திருக்கழுத்தில் கட்டினான்மங்கிலியம்
மாதுதிருக்கழுத்தில் மங்கிலியஞ்சூட்டினானே
தாலிதரித்தபின்பு தார்வேந்தநல்லதம்பி
வந்தவுறன்முறைக்கு வழங்கினான்போஜனங்கள்
தாம்பூலம்புஷ்பமுதல் தான்கொடுத்தார்வந்தவற்கு
பந்தல்சபைதனிலே வந்தவர்களுன்பாக

சீதனச்சிறப்பு.

கலியாணவாசலிலே என்னென்னசீதனங்கள்
என்னென்னசீதனங்கள்; பெற்றாளிளங்கொடியும்
சீதனங்களில்லையென்று சீர்குழலேபேசாதே
பட்டிநிறைந்திருக்கும் பாற்பசுவாஞ்சீதனங்கள்
எரிநிறைந்திருக்கும் எருமைகடாஞ்சீதனங்கள்
காடுநிறைந்திருக்கும் கருப்பாடாஞ்சீதனங்கள்
மேட்டுக்கழனி மூலைக்கழனிசீதனங்கள்
பள்ளக்கழனி பயிர்க்கழனிசீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடிக்கு
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
சீதனங்களில்லையென்று சீர்குழலேபேசவேண்டாம்
வரிசைகளில்லையென்று வார்குழலேபேசவேண்டாம்
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
தோளுக்குத்தோளு துளசிமணிசீதனங்கள்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமைகளுண்டு
கைபிற்சரிற்பவழங் கனகமணித்தாவடங்கள்
மார்புசறப்பளியாம் வயிரமணிச்சீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
சீதனங்களில்லையென்று சீர்குழலேபேசாதே
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
உட்கட்டுந்தாலி யுருக்குமணிஆபரணம்
உட்கார்ந்துமோர்கடைய முக்காலிபொன்னாலே
சார்ந்திருந்துமோர்கடைய சார்மணைபொன்னாலே
பிடித்துப்பால்கறப்பதற்கு பிடிக்கயிறும்பொன்னாலே
அணைத்திருந்துபால்கறக்க அணைகயிர்பொன்னாலே
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
ஆலாத்திபெண்களிலே ஆறுலட்சம்பெண்களுண்டு
பாக்குநறுக்கியிடும் பரிவாரமெத்தவுண்டு
வெற்றிலைச்சுருள்மடிக்கும் வெள்ளாட்டிபெண்களுண்டு
தெற்குத்தெருநிறைந்த தென்னமாஞ்சாலைகளாம
[illegible]க்குத்தெருநிறைந்த வாழைமரத்தோப்புகளாம்



நல்லதங்காளும் காசிராஜனும்
தங்கள் தேசம்போகுதல்

கிழக்குத்தெருநிறைந்த கிராமங்கள்சீதனங்கள்
மேற்குத்தெருநிறைந்த விளாமரங்கள்சீதனங்கள்
குத்துமுளக்கைகள் கூடைமுறம்சீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியாள்

நல்லதங்காளும் காசிராஜனும் தங்கள்தேசம் போகுதல்,

சீதனங்கள்தான்கொடுத்து சிறப்பாகநல்லதம்பி
தங்கைமுகம்பார்த்து தார்வேந்தனே துரைப்பான்
ஏறுமம்மாதண்டிகையில் என்பிறவிநாயகமே
ஏறுமென்றுசொன்னவுட னிளங்கொடிகண்சிவந்து
அடித்துப்புரண்டழுதாள் ஆபரணமற்றுவிழ
முட்டியழுதாளே முத்துமணியற்றுவிழ
கட்டியழுதாளே கடகமணியற்றுவிழ
தாவியழுதாளே தலையணைமெத்தையிலே
அப்போதுநல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஏண்டியம்மாதங்கையுனக் கித்தனைகோபமென்ன
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
நீநினைத்தபிரகாரம் நான்வருவேன்தங்கையென்றான்
பாலால்குறைச்சலுண்டோ பாக்கியத்தால்தாழ்ச்சியுண்டோ
சாலால்குறைச்சலுண்டோ சம்பத்தால்தாழ்ச்சியுண்டோ
பூவால்குறைச்சலுண்டோ பொற்கொடியேநாயகமே
ஏறுமம்மாதண்டிகையில் என்பிறவிநாயகமே
நீயேறுந்தண்டிகைக்கு முன்தண்டிநம்முடைதென்றான்
தாதியருமுன்னடக்கத் தாமமுடியாட்குத்
தோழியருமுன்னடக்கத் தோகைமயிலணைக்கு
பாங்கியர்கள்முன்னடக்கப் பாவையிளங்கொடிக்கு
பாவையர்பின்னடக்கப் பத்தினியும்வழிநடந்தாள்
காலாளுஞ்சேவகரும் காவலரும்முன்னடக்க
கத்திகட்டுஞ்சேவகரும் காவலரும்முன்னடக்க
ஈட்டிபிடிமன்னர் இருபுறமுஞ்சூழ்ந்துவர
யானையுஞ்சேனையும் அத்தனையுமுன்னடக்க
குதிரைபரிவாரம் கோடிதளம்பின்னடக்க
கட்டியங்கூறிவரக் கவிவாணர்பாடிவர
சிங்காரத்தேவதாசி தெருவில்நடனம்புரிய
ஊர்வசிரம்பையைப்போல் உலாவிநடனம்புரிய
புகுந்தாளரண்மனையில் புருஷனிணைபிரியாள்
எதிரொருவரில்லாமல் எல்லையரசாண்டிருந்தாள்
மற்றொருவரில்லாமல் மதுரையிலேவாழ்ந்திருந்தாள்
வாழும்பெருமைகளை வாக்குரைக்கக்கூடாது

வாழ்ந்திருக்கும்போது மகாதேவர்தன்னருளால்
கிளிமொழிமாதருக் கெர்ப்பமதவுண்டாகி
ஏழுவருஷத்துக்குள் ஏழுபிள்ளைபெற்றெடுத்தாள்
பெற்றெடுத்தநல்லதங்கை பெருண்டாய்வாழ்ந்திருந்தாள்
வாழ்ந்திருக்கும்நாளையிலே வாழ்வரசிசீமையிலே

நல்லதங்காளுக்கு பஞ்சகாலம்வந்தது.

பன்னிரண்டொருவருஷம் பாரமழைபெய்யவில்லை
சிறுசம்பாபெருஞ்சம்பா சீரானசின்னசய்யா
கார்நெல்லுங்குண்டுசம்பா கம்புதினைகேழ்வரகு
துவரைஅவரையெள்ளு சோளம்நவதானியமும்
நாட்டில்மழையுமில்லை நல்லவிளையுமில்லை
தேசஞ்செழிப்புமில்லை செந்நெல்விளையுமில்லை
இப்படியாகபஞ்சம் நேர்ந்ததிளங்கொடிக்கு
வாராதபஞ்சமென்ன வந்ததிளங்கொடிக்கு
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததிங்கே
மரக்காலுருண்டபஞ்சம் மன்னவரைதோற்றபஞ்சம்
நாழியுருண்டபஞ்சம் நாயகனைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்டபஞ்சம் ஆளனைத்தோற்றபஞ்சம்
தாலிபறிகொடுத்து தனிவழியேநின்றபஞ்சம்
கூடைபறிகொடுத்து தனிவழியேநின்றபஞ்சம்
கணவனைப்பறிகொடுத்து கைகுழந்தைவிற்றபஞ்சம்
இப்படியாகயிளங்கொடிக்குவந்திருக்க
அப்பெரியபஞ்சத்திலே ஆரணங்குகேதுசெய்தாள்
தாலிதவிரவைத்து தங்கமெல்லாம்விற்றுவுண்டாள்
மாலைதவிரவைத்து மற்றதெல்லாவிற்றுவுண்டாள்
ஆலாத்திபெண்களிலேஆறுலட்சம்விற்றுவுண்டாள்
பாக்குநறுக்கியிடும் பணிப்பெண்ணைவிற்றுவுண்டாள்
வெற்றிலைச்சுருள்மடிக்கும் மெல்லியரைவிற்றுவுண்டாள்
மரங்கள்முதலானதுவும் வந்தமட்டும்விற்றுவுண்டாள்
குத்துமுலக்கைளும் கூடைமுறம்விற்றுவுண்டாள்
அண்ணனுடசீதனங்க ளத்தனையும்விற்றுவுண்டாள்
தமயனுடசீதனத்தை தாணியில்விற்றுவுண்டாள்
தங்கப்பணிதியெல்லாந் தவிட்டுக்குவிற்றுவுண்டாள்
இத்தனையுந்தான்விற்று ஏழையாய்நின்றாளே
தக்கபொருள்விற்றுவுண்டு தாங்கமுடியாமல்
தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றாள்
பொறுக்கமுடியாமல் பிறந்தகத்தேபோறேனென்று
இப்படியாகயிளங்கொடியாள்தானுரைத்தாள்
அப்போதுஆளன் ஆரணங்குக்கெடுத்துரைப்பான்

அடி-இப்போதுபோகிறது இனிதல்லவுத்தமியே
வாழ்ந்துகெட்டுபோனாயானால் வலதுசிரிப்பாரோடி।
கெட்டுநொந்துபோனாயானால் கிளையிலுஞ்சேர்க்காரோடி
கண்டார்சிரிப்பாரோடி காசினியோரேசிடுவார்
பார்த்தார்நகைப்பாரோடி பாரிலுள்ளோரேசிடுவார்
உன்னொத்தநாயகிமார் உகந்துசிரிப்பாரோடி
வலதுகிடங்கொடாதே வார்குழலேநாயகமே
பென்னேநவமணியே புனக்கிளியேசொல்கிறேண்டி
ஆனாலும்பெண்மயிலே அருங்கிளியேசொல்கிறண்டி
தாலிகட்டிக்கொண்டமுதல் தனிவழியேபோனதில்லை
மாலையிட்டுக்கொண்டமுதல் மறந்துநாம்போனதில்லை
இப்போதுபோகிறது இனிதல்லவுந்தமியே
தண்டிக்குத்தண்டிபெண்ணே சரியாகவாழ்ந்தோமானால்
வாவென்றழைப்பார்கள் வகையுண்டாய்பேசிடுவார்
கெட்டமகள்போனாயானால் கிழிந்ததடுக்கிடுவார்
வாழ்ந்தமகள்போனாயானால் வண்ணத்தடுக்கிடுவார்
இப்போதுபோவதுனக் கியலல்லவுத்தமியே
பட்டணத்தில்புல்லுவிற்று பாலகரைக்காத்திடுவோம்
இப்பெரியபட்டணத்தி லிருந்துபிழைத்திடுவோம்
சாணியெடுத்துவந்து தட்டிப்பிழைப்போமடி
கூலியெடுத்தாகிலுநாம் கூடிப்பிழைப்போமடி.
வேலிவிறகொடித்து விற்றுபிழைப்போமென்றான்
இப்படியாகக்கணவன் எடுத்துரைக்கும்வேளையிலே

### நல்லதங்காள் புருஷன்சொல் தடுத்து தாய்வீடுசெல்லல்.

அப்போதுநல்லதங்காள் ஆளனுக்கேதுசொல்வாள்
பூமுடிக்குங்கூந்தலிலே புல்லெடுக்கக்காரணமோ
வேர்முடிக்குக்கூந்தலிலே விறகெடுக்கவென்விதியோ
சந்தனமிழைக்குங்கையாற் சாணிதட்டக்காரணமோ
குங்குமமெடுக்குங்கையாற் கூலிவேலிசெய்யலாமோ
ஆனைகட்டிஎங்களண்ணன் அத்திபுரமாளுகிறான்
குதிரைகட்டிஎங்களண்ணன் குவலயத்தையாளுகிறான்
ஆளுகிறான்சீமையெல்லாம் அரண்மனையும்பேர்போக
என்-அண்ணனரண்மனைக்கு அரசாளப்போறேனே
தமயனரண்மனைக்குத் தாய்வீடுபோறேனென்றாள்
அப்போதுஆளன் அரிவையருக்கேதுரைப்பான்
பேச்சுதனைக்கேளாமற் பெண்மயிலேபோறாயோ
யோரவிடந்தனிலே பிழைமோசம்வந்துவிடும்

என்றதைக்கேட்டு எடுத்துரைப்பாள்நல்லதங்காள்
போங்காணும்பத்தாவே போய்பார்த்துவாரேனென்றாள்
புத்திரரைநான்வளர்த்து வருவேன்காண்புண்ணியரே
மைந்தரைநான்வளர்த்து வருவேன்காண்மன்னவனே
போய்பிழைத்துவாரேனென் பொற்கொடிநமஸ்கரித்தாள்
என்பேச்சுகேளாமல் ஏந்திழையேபோறியோ
கொண்டவனார்வார்த்தை கோடுதவறாதே
ஆளன்சொல்தள்ளாதே அநம்பாவிசண்டாளி
புருஷன்சொல்தள்ளாதே பொல்லாதசண்டாளி
நீ-போனாலும்போறபடி புத்திரர்பதனமடி
மைந்தர்களுக்குச்சேதம் வந்ததென்றுகேட்டேனால்
நீ-சயாய்ப்பறந்தாலும் இருதுண்டாய்போட்டிடுவேன்
காற்றாய்ப்பறந்தாலுங் கண்டதுண்டம்செய்திடுவேன்
மக்கள்பதனமடி மங்கையரேநடவுமென்றான்
பிள்ளைபதனமடி பெண்ணேநடவுமென்றான்
அப்போதுநல்லதங்காள் ஆளனுக்குதெண்டனிட்டாள்
போய்வாரேனென்று புருஷனுக்குதெண்டனிட்டாள்
தோளிலொருபிள்ளைவைத்தாள் சோலைமயிலனையாள்
பக்கத்தில்பிள்ளைவைத்துக் கடுகவழிநடந்தாள்
முதுகின்மேல்பிள்ளைவைத்து மொங்குழலாள்தானடந்து
பத்தினியுமுன்னடக்கப் பத்தாவும்பின்னடக்க
இருவருமப்போது இசைந்துவழிநடந்து
பார்ப்பாரத்தெருகடந்து பாளையவீதிவந்தார்
வன்னியர்தெருகடந்து வாழரசர்வீதிவந்தார்
செட்டித்தெருகடந்து சேணியனார்வீதிவந்தார்
வேளாளர்தெருகடந்து வேகமுடனாக
பலதெருவுந்தான்கடந்து பக்ஷமுடன்வாராளே
தேரோடும்வீதி தெருவீதிகோடியிலே

## நல்லதங்காளுக்கு அவசகுனம்நேரிடல்.

கன்னிகழியாப்பெண் கையில்நெருப்பெடுத்தாள்
வாழாக்குமரியவள் மீளாநெருப்பெடுத்தாள்
வண்ணான்வெளுத்தவொரு புடவைகண்டாள்மங்கையரும்
வாணியன்கூடையல்லோ வரக்கண்டாள்தன்னெதிரே
ஒரிகுறுக்காச்சு ஒற்றைப்பார்ப்பானெதிரானான்
சாரிகுறுக்காச்சு சர்ப்பம்தடையாச்சு
காடையிடமாச்சு கருகுருமான்கட்டாச்சு
பூனைகுறுக்காச்சு புதப்பானைமுன்னாச்சி
அப்போதுதன்கணவனரிவையருக்கேதுசொல்வான்
ஆகாசகுணம்பெண்ணே அடியெடுத்துவைக்காதே

பொல்லாச்சகுனம்பெண்ணே போகாதேபெண்மயிலே
குட்டியிட்டநாகேந்திரன் குறுக்கேயிடமாச்சு
என்றுமவருரைக்க இபலானநல்லதங்காள்
ஆகாச்சகுனத்தை அறிந்துவரவேண்டுமென்றாள்
பொல்லாதசகுனத்தைப் போய்பார்க்கவேண்டுமென்றாள்
போய்பார்த்துவாரேனென்று பூவையுந்தெண்டனிட்டாள்
பதிங்காதவழிதூரம் பத்தாவும்வழிவிட்டார்
மாதரைப்போகவிட்டு மன்னனுந்திரும்பிவிட்டான்
அப்போதுநல்லதங்காள் ஆரணங்குநடக்கலுற்றாள்
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனச்சாலைவிட்டு
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சம்வனந்தாண்டி
சூரைக்காய்காய்க்கும்வனம் சுண்டக்காய்காய்க்கும்வனம்
கொஞ்சிபழுக்கும்வனம் குயிலினங்கள்தூங்குவனம்
சிங்கமுறங்குவனம் சிறுபுலிதூங்குவனம்
பேய்நுழையாக்கானகத்தே இனிபுகுந்தாள்கட்டழகி
வழியுந்தெரியாமல் வகைதப்பிநின்றழுதாள்
அத்துவானகானகத்தில் ஆரணங்குபோய்நடந்தாள்
மாமரத்தின்சோலையிலே மங்கையரும்போயிருந்தாள்
பூமரத்தின்சோலையிலே பொற்கொடியும்வந்துநின்றாள்
மக்களைசூழவைத்து மங்கைபுலம்பலுற்றாள்
பிள்ளைகளைச்சூழவைத்து பெண்பெருமாளழுகலுற்றாள்
மாமரத்தின்சோலையிலே மங்கைபுலம்பலுற்றாள்
பிள்ளையழுகிறதும் பெண்ணாள்கலங்கிறதும்
கன்னியழுகிறதும் காளைபுலம்புறதும்
மக்களழுகிறதை மாமரமும்பார்த்தழுமாம்
அத்துவானகானகத்தில் அழுதுபுலம்புகையில்
எழுபிள்ளைநல்லதங்காள் இருந்துபுலம்புகையில்
ஆணுலழகுமன்னன் அண்ணன்நல்லதம்பியவன்
ஆண்டிருக்குஞ்சீமையிலே அவனுடையமாளிகையில்

## நல்லதம்பி கனவு காண்கிறது.

தூக்கம்வருகுதென்று தூங்குமஞ்சமெத்தையிலே
தங்கப்பொன்கட்டிலிலே தான்படுத்தான்நல்லதம்பி
சொர்னப்பொன்தொட்டிலிலே தூங்குகின்றவேளையிலே
மனையிற்பிறந்தபெண்ணும் மாதுநல்லதம்பிறவி
தாலிதரித்துக்கொண்டு தன்புருஷன்வீடுவந்து
நாற்பத்தொருவருஷம் நலமாகவாழ்ந்திருந்து
எழுபிள்ளைபெற்றுமவள் இருக்கின்றவேளையிலே
பொல்லாதகால்மது சொல்லாமல்வந்ததுவாம்
பன்னிரண்டொருவருஷம் பஞ்சம்வந்துநேர்ந்ததுவாம்

தாலிதவிரமற்ற தங்கமெல்லாம்உண்டபஞ்சம்
மங்கிலியந்தான்தவிர மற்றதெல்லாமுண்டபஞ்சம்
தாங்கமுடியாமல் தாய்வீடுவருவதுமாய்
வழிகள்தெரியாமல் வனத்திற்புலம்புவதும்
காட்டிலேசத்தமிடக் காதிலேகேட்டதுபோல்
சொற்பனங்கண்டானே துரைமன்னன்நல்லதம்பி
ஒற்றைக்குராலுமென்ன ஒருத்திபழசத்தமென்ன
அத்துவானகானகத்தில் அழுகிறுள்பெண்பெருமாள்
தூங்கியெழுந்திருந்தான் தய்யகனுகண்டதுபோல்
அலறியெழுந்திருந்தான் அல்லற்கனுகண்டதுபோல்
ஓங்கியெழுந்திருந்தான் ஓங்காரகோபமுடன்

நல்லதம்பி காட்டில் வேட்டைக்குவந்து
தங்கையைக்காணல்

கச்சைவரிந்துகட்டிக் கருங்கச்சைதானணிந்து
வாளுருவிதோளில்வைத்து மன்னனெழுந்திருந்தான்
கருநாயும்சங்கிலியும் கைக்கேற்றஅம்புகளும்
முள்ளிவிட்டவேலியெல்லாம் முருக்கமபூவில்லுகளும்
சல்லியிட்டநாயுடனே சகலகுலபாண்டியரும்
வெள்ளானைமேலேறி வேட்டைக்குவாரானங்கே
கறுப்பானைமேலேறிக் காட்டுக்குவாரானங்கே
ஆனையின்மேலேறிக் அதிரவேட்டைவாரானே
குதிரையின்மேலேறி குதிரைவேட்டைவாரானே
காட்டிலேவந்துமவன் கனவேட்டையாடையிலே
வேட்டைகளாடிக் களைக்குமந்தவேளையிலே
ஆனைகுதிரையெல்லாம் அங்கங்கேதானிறுத்தி
குதிரைபரிவாரம் கோடிதளம்தானிறுத்தி
ஆணழகன்நல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஆரடாசேவகரே அர்க்காருதம்பிமாரே
எவரடாகாவலரே இனிபிரியமன்னவரே
அத்துவானகானகத்தில் ஆரோபுலம்புறது
ஆரோபுலம்புறது அறியவேவேணுமென்று
பூவையழுகிறதைப் போய்பார்க்கவேணுமென்று
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசெய்தான்
கருநாயைக்கைகொடுத்தான் காவலரைபோகவிட்டான்
செந்நாயைக்கைகொடுத்தான் சேவகரைபோகவிட்டான்
அருளருளுமென்னையா அப்படியேநல்லதென்று
நல்லதம்பிதன்னுடனே நாலுலட்சஞ்சேவர்கள்
காலாளுஞ்சேவர்களும் கடுகெனவேஓடிவந்து
நல்லதங்காளருகில்வந்து நலமாகஎதுசொல்லுவார்

கானகத்தில்புலம்புகிற கட்டார்கருங்குழலே
வனத்தில்புலம்புகிற வனக்கிளியேபேயாரு
ஒண்டித்தனியாக ஒருமையாதானிருந்து
காட்டிற்புலம்புகிற காரணத்தைசொல்லுமென்றார்

### சேவர்கள் காட்டில் நல்லதங்காளைக்கண்டு அவர்கள் வரலாறு கேட்குதல்.

எந்தவூர்தாயாரே எனக்கறியச்சொல்லுமென்றார்
காட்டிலேவந்துநீ கதறிப்புலம்புவதேன்
ஒண்டியாய்த்தானிருந்து ஓங்கியழுவதென்ன
வந்தவரலாற்றை வகையாகச்சொல்லுமென்றார்
அப்போதுநல்லதங்காள் அர்க்காருக்கெடுத்துரைப்பாள்
ஊர்களும்பேர்களும் உங்கட்குச்சொல்லணுமா
குலங்களைக்கேட்டு அண்ணே பெண்கொள்ளவந்தாயடா
என்பாடுசொல்லவென்றால் நிலப்பாடுசாயுமடா
என்பாடுசொன்னால் எங்கும்நிலவெறிக்கும்
பெண்பாடுசொல்லவென்றால் பொழுதுவிடியுமண்ணே
என்றுசொல்லிநல்லதங்காள் எடுத்துரைத்தாள்சேவகற்கு
அப்போதுகாவலர்கள் அரிவையர்க்குக்கூறலுற்றார்
ஐந்துபிராயமண்ணே அறியாதநாளையிலே
தாயுந்தகப்பனும் செத்துமடிந்தபோது
குடுமிதலையுடனே கட்டிவிட்டமங்கிலியம்
பாவாடைகட்டவொண்ணா பதந்தெரியாநாளையிலே
சிற்றாடைகட்டவொண்ணா சீர்தெரிந்தநாளையிலே
கட்டிக்கொடுத்தாரண்ணே கடுகவந்தமன்னவர்க்கு
ஒப்பிக்கொடுத்தாரண்ணே உண்டானகாவலர்க்கு
தாலிதரித்தமுதல் தாய்வீடுபோனதில்லை
மாலையிட்டநாள்முதலாய் மற்றொருநாள்வந்ததில்லை
நான்போனநாள்முதலாய் நல்லமழையுமில்லை
பன்னிரண்டொருவருஷம் பாரமழைபெய்யவில்லை
நாற்பத்தொருவருஷம் நன்றாகவாழ்ந்திருந்தேன்
வாழும்பெருமையிலே மக்களைப்பெற்றெடுத்தேன்
ஏழுபேர்மக்களை இன்பமாய்ப்பெற்றெடுத்தேன்
பெற்றேனேமக்களை பேருண்டாய்வாழ்ந்திருந்தேன்
வளர்த்தேனேமக்களை வாழ்வுண்டாய்வாழ்ந்திருந்தேன்
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததிங்கே

மாக்காளுருண்டபஞ்சம் மன்னவரைத்தோற்றபஞ்சம்
அழாக்குருண்டபஞ்சம் ஆளைத்தோற்றபஞ்சம்
தாலிபறிகொடுத்துத் தனிவழியேநின்றபஞ்சம்
கூறைபறிகொடுத்துக் கொழுநனைத்தோற்றபஞ்சம்
தாலிதவிரவைத்து தங்கமெலாம்விற்றுவுண்டேன்
இத்தனையும்விற்றுவுண்டேன் தாங்கமுடியவில்லை
தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றேன்
பொறுக்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றேன்
அண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றேன்
என்றவுரைகேட்டு இயலானசேவர்கள்
வந்ததேபோதுமம்மா மனக்கவலைதீர்ந்துவிடும்
சுகமாகத்தாய்பேரைச் சொல்லுமம்மா ஆரணங்கே
உன்பேரைநாங்கள்கேட்க உத்தமியேசொல்லுமம்மா
அப்போதுநல்லதங்காள் ஆரிழையுங்கூறலுற்றாள்
தாய்பேர்இந்திராணி தகப்பன்பேர்ராமலிங்கம்
என்பேர்நல்லதங்காள் என்னண்ணன்பேர்நல்லதம்பி
என்றுமவளுரைக்க இயலானநல்லதம்பி

நல்லதம்பி நல்லதங்கையைக்கண்டு பாதவித்தல்.

ஆனைவிட்டுத்தானும் அண்ணனுதித்திறங்கி
குதிரைவிட்டுத்தானும் சொப்பனமேலதானிறங்கி
கட்டியழுதானே கடலிறைந்தபாவனைபோல்
தாவியழுதானே தங்கைமடிமீதில்
கட்டியழுதுமன்னன் கலைதெளிந்தபிற்பாடு
கண்ணாட்டிபெற்றசெல்வம் கால்நடையாய்வந்ததென்ன
ஆனையரிதாச்சோ ஆண்டிருந்தசீமையிலே
குதிரையரிதாச்சோ உன்னுடையசீமையிலே
பல்லக்குபஞ்சமோ தான் பத்தினியாளேறிவர
தண்டிகைகிட்டாதோ தாமருமயாளே
பாங்கிமார்பஞ்சமோதானே பத்தினியேவுந்தனுக்கு
பாலால்குறைச்சலுண்டோ பாக்கியத்தால்தாழ்ச்சியுண்டோ
சாலால்குறைச்சலுண்டோ சம்பத்தால்தாழ்ச்சியுண்டோ
எதனால்குறைச்சலம்மா என்பிறவியிங்குவர
ஓலைகிடையாதோ உத்தமனூர்சீமையிலே
ஓலையெழுதியல்லோ உத்தமியேயனுப்பிவைத்தால்
ஓலைகண்டநாழிகையில் ஓடிவந்துபாரேனோ
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
தாயே-நீநினைத்தபிரகாரம் நான்வருவேனே தங்கையரே
கால்நடையாயிங்குவரக் காரணமோஎன்பிறப்பே

என்பிறப்பேவீட்டுக்கு ஏகுமம்மாநான்வருவேன்
பிள்ளைவிளையாட புள்ளிமான்கொண்டுவாரேன்
மைத்தர்விளையாட மான்வேட்டையாடிவாரேன்
தென்னண்டைவாடையிலே தேங்காய்குவித்திருக்கும்
வடவண்டைவாடையிலே மாங்காய்குவித்திருக்கும்
பிள்ளையும்நீயுமாய்ப் போடியம்மாதங்கையரே
உன்னைக்-கண்டவுடனவளுங் கடுகச்சமைத்திடுவாள்
வீட்டுக்குப்போடியம்மா வேட்டையாடிவாரேனென்றான்
அப்போதுநல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்

நல்லதம்பி நல்லதங்காளை தன்வீட்டுக்கனுப்புதல்.

அண்ணாடா அண்ணாடா ஆணழகா சொல்கிறேன்
வாசலறியேனப்பா வளவுகுறிப்பறியேன்
கோயிலறியேனப்பா குறிப்பறியேன்கொற்றவனே
அடையாளம்சொல்லுமென்றா ளரிவையிளங்கொடியும்
மூன்றுகதவிருக்கும் மோதாங்கிப்பூட்டிருக்கும்
புறக்கடைவாசலிலே பொன்னின்கதவிருக்கும்
தலைக்கடைவாசலிலே தங்கக்கதவிருக்கும்
நாலுகதவிருக்கும் நாதாங்கிப்பூட்டிருக்கும்
காராம்பசுவுமுண்டு கட்டழகிவாசலிலே
காட்டானைவாசலிலே கட்டியிருக்குதம்மா
கன்றுகமிரண்டுமெங்கே கட்டியிருக்குதம்மா
அதுவேஅடையாளம் அம்மணிபோகுமென்றான்
உத்தமியேவீட்டுக்குப்போ உன்பிறகேநான்வருவேன்
போடியம்மாதங்கையரே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போதுநல்லதங்காள் அரிவையுமேதுசொலவாள்
அண்ணாடா அண்ணாடா ஆணழகா சொல்கிறேன்கேள்
மாதாயிருந்தாலும வாவென்றுதானழைப்பாள்
தாயற்றபோதேயண்ணா தயவற்றுபோகலையோ
அப்பனற்றபோதேயண்ணா ஆதரவுநானுமற்றேன்
மூளியலங்காரி முருகுழலாளண்ணியம்மாள்
வாவென்றழைப்பாளோ வரிசையிட்டுப்பார்ப்பாளோ
ஏனென்றுகேட்பாளோ ஏறமுகம்பார்ப்பாளோ
அண்ணாருமிருந்தா லருமைகள்மெத்தவுண்டு
என்பிறப்பேநீயிருந்தால் எனக்குமெத்தசொந்தமுண்டு
நீ-இல்லாமாளிகையில் நானபோகலாகாது
அண்ணனில்லாவீட்டில் அடியெடுத்துவையேனென்றாள்
அந்தவுரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
தாயேஉன்னைவளர்த்த தாதியிருக்கலையா
அண்ணனிட பெண்சாதி ஆத்தாளிருக்கலையா
உடற்பிறப்பேவீட்டுக்குப்போ உன்பிறகேநான்வருவேன்

போடியம்மா தங்கையரே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போது நல்லதங்கா ளரிவை துரிதமுடன்
நல்லதென்றுசொல்லி நடந்தாளேநாயகியாள்
காடுமலைதாண்டி கடுகவேநடக்கலுற்றாள்
பிள்ளைகளைப்பின்னடத்தி போகிறாளேநடுத்தெருவே
மைந்தர்களைப்பின்னடத்தி போகிறாள்கடைத்தெருவே

### மூளியலங்காரி நல்லதங்காள் வருவதைக்கண்டு தன் ஆபரணமெல்லாம் பத்திரப்படுத்தல்.

அப்போது நல்லதம்பி ஆணழகன்தேவியரும்
உப்பரிகைமீதேறி யுலாவுகையில்கண்டுவிட்டாள்
கண்டாளேகண்டாளே கண்ணாட்டிநாத்தியாரை
கண்டுஇடிவிழுந்தாள் கட்டாணியப்போது
பார்த்துஇடிவிழுந்தாள் பாவியந்தசண்டாளி
தாதிகளைமூப்பிகளைத் தந்திரமாய்த்தானழைத்து
ஆரடிதாதிகளே அரைக்ஷணத்தில்நீங்களிப்போ
தென்னண்டைமூலைகளில் தேரோடும்வீதியிலே
வடவண்டைவீதியிலே வாரவளாரடித்தான்
வாரவளாரடிதான் மாதரேபாருமென்றாள்
அப்போது தாதிவர்க ளரிவையர்களோடிவந்து
தெருவீதிதன்னில்வந்து சேடியரும்பார்க்கலுற்றார்
பார்த்துமேஓடிவந்து பாவையர்களே துரைப்பார்
மனையிற்பிறந்தபெண்ணு மகராசிவாராளம்மா
அப்போ-மூளியலங்காரி மூதேவியே துரைப்பாள்
இவளிருக்குஞ்சீமையிலே இக்காலங்கருப்புமுண்டு
நானிருக்குஞ்சீமையிலே நாயகமேஎன்வருவாள்,
சீமைகளைப்பூமிகளைச் சீர்கொள்ளவாராளோ
என்வாழ்வைப்பறிக்கவல்லோ வாராளேசக்களத்தி
காடுகரைகளெல்லாங் கைக்கொள்ளவாராளே
என்குடிக்குதீமைவைக்க எங்கிருந்துவாராளோடி
பொன்னாபரணமெல்லாம் போட்டளிக்கவாராளோடி
தங்கப்பணிதியெல்லாம் தாலரிக்கவாராளோடி
தென்னண்டைகண்டாரானால் தெருக்கதவைச்சாத்திவிடு
வடவண்டைகண்டாரானால் வலக்கதவைசாத்திவிடு
மூளியலங்காரி மூதேவிசொற்படிக்கு
தாதிகளப்போது சாத்திக்கதவடைத்தார்
இருத்திக்கதவடைத்தாள் ஈரமணல்போட்டடைத்தாள்
பானையின்சாதமெல்லாம்; பதனப்படுத்திவைத்தாள்
மூளியலங்காரி மூதேவியேதுசெய்வாள்
பட்டைகழற்றிவைத்தாள் பாடகத்தைவாங்கிவைத்தாள்

சேலைகளைந் தாமவள் திருவாணப்பெட்டில்வைத்தாள்
இட்டபணிதியெல்லாம் பெட்டியில்கழற்றிவைத்தாள்
பழந்துணிகந்தைகளைப் பாவியவள்கட்டிக்கொண்டாள்
முகத்திலேபற்றுமிட்டாள் மூதேவிசண்டாளி
தலையிலேபற்றுமிட்டாள் தரையிலேபள்ளிகொண்டாள்
வாசற்படியெதிரே மங்கையரும்பள்ளிகொண்டாள்

### நல்லதங்காள் அண்ணன்வீடுசேர்தல்.

அப்போதுநல்லதங்கா ளிவையிளங்கொடியும்
நாத்தினார்தன்மனையில் நாயகியும்வந்துநின்று
கதவையும்தட்டியவள் காரிழைநாயகியும்
நின்றாளொருசாமம் நேரிழையாளப்போது
நான்பேசாதஅண்ணியுடன் பேசவேவேண்டுமென்று
அப்போதுநல்லதங்கா ளிவையிளங்கொடியும்
அண்ணியரே அண்ணியரே அண்ணனிடதேவியரே
அண்ணனாரண்மனையை ஆளவந்தமதனியரே
தமயனாரண்மனையை தாங்கவந்தமதனியரே
ஆடிகாலுங்கடுக்குதண்ணி உச்சட்டைநோகுதண்ணி
நின்றக்கால்சோருதடி நிலையுங்கடுக்குதண்ணி
கதவைத்திறவாயோ கண்ணாட்டிஅண்ணியரே
என்றுமவள்கூறி இளங்கொடியாள்நிற்கையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
என்னதெண்ணம் எண்ணியவள்பள்ளிகொண்டாள்
ஏழுபிள்ளைபெற்றவள் இளங்கொடியாளேதுசெய்தாள்
கதவருகில்வந்துநின்று கடவுளைக்கைதொழுது
அண்ணி-பத்தரையுங்கட்டியே பாங்காய்வளர்த்தபிள்ளை
எட்டரையுங்கட்டிவல்லோ இயலாய்வளர்த்தபிள்ளை
பாலமுதுசோறுசெய்து பங்கிடுநான்வளர்த்தேன்
நெய்யமுதுசோறுசெய்து நேர்த்தியாய்வளர்த்தபிள்ளை.
கத்திரிக்காய்போலேயண்ணி கதருதடிபாலரெல்லாம்
வெள்ளரிக்காய்போலேயண்ணி வெம்புதடிபாலரெல்லாம்
தண்ணீர்தண்ணீரென்றுசொல்லி தவிக்குதடிபாலரெல்லாம்
அன்னமென்றுசொல்லி அலையுதடிமக்களெல்லாம்
புத்திரர்பசியாறப் புத்திகளைச்சொல்லுமண்ணி
மனதுமிரங்கலையோ மாபாவிஅண்ணியென்றாள்
இறங்குந்திருமுகத்தை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி.
மைந்தன்பசியாற வார்த்தைகளைச்சொல்லுமண்ணி
என்னைப்பார்க்காவிட்டா லென்பிள்ளையைப்பாருமண்ணி
முத்தான்வாய்திறந்து உத்தரம்சொல்லுமண்ணி
வாயைத்திறந்தாக்கால் வாய்முத்தஞ்சிந்துமடி

தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமடி
தங்கமுதிர்ந்துமண்ணி தடுமாறிப்போருயடி.
என்னேரமட்டுமண்ணி இதம்பாடிநிற்பேனுன்
தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமோதான்
வாயைத்திறந்துநீ மறுவார்த்தைசொல்லுமண்ணி
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இறங்குந்திருமுகத்தை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
கவிழ்ந்ததிருமுகத்தை கண்ணெடுத்துப்பார்க்கவில்லை

நல்லதங்காள்சாபத்தால் கதவுதிறக்கப்பட்டது.

அப்போதுநல்லதங்காள் ஆணங்கேதுசெய்தாள்
பத்தினியும்நானானால் பத்தாவுமவரானால்
உத்தமியும்நானானால் ஒருநூல்கழுத்தியானாள்
தாள்பூட்டும்சங்கிலியும் தானேதிறக்கவேண்டும்
தானேதிறக்கவேண்டும் தாய்வீட்டுபொற்கதவு
பத்தினியாள்வாக்கு பலித்ததுதானப்போது
பத்தினியாள்சொற்படிக்கு பளிச்செனத்திறந்திடுமாம்
உத்தமியாள்சொற்படிக்கு ஓடித்திறந்திடுமாம்
உட்கட்டுகதவுகள்தா னுடனேதிறந்ததப்போ
கதவுதிறந்தவுடன் கட்டழகிநல்லதங்காள்
முன்வைத்தகாலையங்கே பின்வைத்துதா னுழைந்தாள்
ஆக்குமடப்பளியும் அடங்கலுஞ்சுற்றிவந்தாள்
எங்கேசுற்றிப்பார்த்தாலும் ஏதொருபண்டமில்லை
மூளியலங்காரி மூதேவிவீற்றிருக்கும்
கூடத்திற்கனிகள் கொட்டியிருகுதங்கே
அண்ணியற்குமுன்னேவந்து அருங்கிளியாள்நிற்கையிலே
பெருமையாய்நல்லதங்காள் பெற்றெடுத்தபிள்ளைகளில்
அதிலேயொருபிள்ளை அக்கனியிலொன்றெடுக்க
மற்றுமொருபிள்ளை மாங்காயெடுத்திடுமாம்
தெளபக்கமோடி தேங்காயெடுத்திடுமாம்
அப்போதுகண்டாளே அண்ணிடதேவியை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நெட்டென்றெழுந்திருந்து நீமாய்க்கைமுறித்தாள்
ஓட்டமாயோடிவந்து ஓரறைதான்கொடுத்தாள்
மாங்காயைத்தான்திருகி மாங்காயுடன்போட்டாள்
தேங்காயைத்தானதிருகி தேங்காயுடன்போட்டாள்
ஆயிரந்தேங்காயிலே அழுகல்காய்கைகொடுத்தாள்
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
கண்ணுளனபெற்றெடுத்த கற்கண்டேசர்க்கரையே
என்னகாழுநன்பெற்றெடுத்த ஓரத்தினசிகாமணியே
காலமலழுயில்லாமல் சழனிவிளையாமல்

தேதிமழையில்லாமல் செந்நெல்விளையாமல்
பயிர்கள்விளையாமல் பஞ்சங்கள்வந்ததினால்
பத்தரசொற்கேளாமற் படியாவிசிமைவந்தேன்
மாமனதுவீட்டிலே மாங்காயைத்தின்னுதீர்
தேங்காயைத்தின்னுதீர் சிறுவரென்மைந்தர்களே
மாங்காயுந்தேங்காயும் மக்களேதின்னுதீர்
வாருங்கள்மக்களென்று மடியிலேதூக்கிவைத்தாள்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதங்காள்தனக்கும் நாயகியாள்பிள்ளைகட்கும்
பன்னிரண்டொருவருஷம் பஞ்சமடைந்தகேழ்வரகை
ஓட்டைத்திருகையெடுத்தொன்றிரண்டாய்மாவாக்கி
சில்லியைத்துபானையிலே இல்லையென்றுலைவைத்தாள்
வாசலிலேநிற்குமந்த வாழைமரந்தான்பிளந்து
ஈனுதவாழை இளவாழைத்தண்டொடித்து
வாழைமரம்பிளந்து வைத்தாளடுப்பிலேதான்
ஊதுகிறாள்பாவி ஒருவாய்புகைகிளம்ப
சிந்தினாள்மூக்கையங்கே திருக்கண்சிவந்திடவே
அப்போதுநல்லதங்கா ஆணங்குகூறலுற்றாள்
நம்முடைய அண்ணியற்கு நம்மால்வருத்தமென்ன
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இந்தவருத்தங்கள் இப்படியாய்நேர்வதென்ன
என்றுசொல்லிநல்லதங்கா ளெடுத்துரைத்தாளக்கினிக்கு
நான்-பத்தினியுமானால் பற்றிஎரியவேண்டும்
உத்தமியுமானால் ஓங்கிஎரியவேண்டும்
கூழும்கொதிக்கவேண்டும் குழந்தைபசியாறவேண்டும்
என்று-பத்தினியாள்சொற்படிக்கு பற்றிஎரியுதங்கே
கொம்பனையாள்சொற்படிக்கு கூழும்கொதித்திடுமாம்
அப்போதுநல்லதங்கா ளண்ணியறகேதுரைப்பாள்
காய்கிறகூழானாலும் கட்டழகிலார்க்காமோ
கொதிக்கிறகூழதனைக் கொடுப்பாயோமதனியென்றாள்
அப்போ-மூளியலங்காரி மூதேவியேதுரைப்பாள்
தைபிறைகண்டேனானால் தரையிலிறக்குவண்டி
மாசிபிறைகண்டேனானால் மாதேயிறக்குவண்டி
முப்பிறைகண்டேனானால் முன்னாலிறக்குவண்டி
மைந்தருக்குமுந்தனுக்கும் வார்ப்பேண்டிகூழதனை
இருந்தாலிருமென்றாள் நடந்தால்நடவுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகுள்ளநல்லதங்காள்
மங்கைமனதுநொந்து மதிமுகம்வேறுபட்டு
உள்ளமனமெரிய உத்தமியாளேதுசொல்வாள்
குழந்தைகுடிக்கவொஞ்சம் கூழுக்குப்பஞ்சமோதான்

மக்கள்குடிக்கக்கூழு மண்டலத்திற்கிட்டாதோ
இரக்கப்புறப்பட்டால் எங்கேயும்கிட்டாதோ
வாங்களடாமங்களா வரிசையாஎன்பிறகே
வைத்துவிளையாட மச்சினிமார்மெத்தவுண்டு
கூடிவிளையாட குழந்தைமார்மெத்தவுண்டு
ஒப்பாரியுறன்முறையா ருண்டுபலபேர்கள்
பாட்டன்வீடுபோய்நாம் பாலமிர்தமுண்ணலாமே
தாய்வீடுபோனாலே தயிர்சாதமுண்ணலாமே
அண்ணன்வீடுபோனாலே ஆசித்திருக்கலாமே
வாங்களடாமக்களா வரிசையாஎன்பிறகே
அண்டைவீட்டுப்பெண்களா அசலாத்துஅப்பியரே
தண்ணீர்க்குப்போறதொரு தாய்மாரேபெண்களா
என்-அண்ணியார்செய்ததொரு அனியாயங்கேட்டீர்களா
மதனியார்செய்ததொரு மரியாதைபார்த்தீர்களா
அண்ணனார்வந்தபின்பு அறிந்ததைச்சொல்லுமென்றாள்
தமயனார்வந்தபினபு தாய்மாரேசொல்லுமென்றாள்
அந்தசொற்கேட்டிருந்த அரிவைமாரெல்லோரும்
நல்லதங்காளைப்பார்த்து நலமாகஏதுசொல்வார்
எங்களிடவீட்டுக் கெழுந்துவாநல்லதங்காள்
அவரவர்கள்தன்வீட்டுக் கழைத்தார்களெல்லோரும்
ஏண்டியம்மாதங்கையரே இத்தனைகோபமென்ன
பச்சரிசிகுத்தித்தாரோம் பாலும்கறந்துதாரோம
பாலரும்நீயுமாகப் பசியாறிப்போங்களென்றார்
அப்போதுநல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
அண்டைவீட்டுதண்ணீர் நாம்குடியோம்அப்பியரே
அசல்வீட்டுதண்ணீர் நாம்குடியோம்அப்பியரே
அண்ணனார்வந்தபின்பு அருஞ்சேதிசொல்லுமென்றாள்
அப்போதுபெண்களெல்லாம் மதிகமாயெடுத்துரைப்பார்
ஏண்டியம்மாதங்கையரே இத்தனைகோபமென்ன

## நல்லதங்காள் காட்டுக்குப்போகும்போது கணையாழி மோதிரமும் ஆவாரந் தழையும் அடையாளமாகப் போட்டு வைத்தல்.

கோபம்பொறுக்காமல் கொல்லைவழிதானடந்தாள்
ஆவாரஞ்செடியொடித்து அடையாளம்போடலுற்றாள்
கொன்றைதழையொடித்து கொடிவழியேதானடந்தாள்
கணையாழிமோதிரத்தை கழற்றியேபோடலுற்றாள்
அத்துவானகானகத்தி லாரணங்குபோய்நடந்தாள்
காட்டானைவனத்திலே கன்னிநடக்கலுற்றாள்

வாருமடாமக்களா வரிசையாய்என்பிறகே
பாட்டனார்வைத்ததொரு பழஞ்சோலைபார்த்தழுதாள்
ஆத்தாள்வைத்ததொரு அருஞ்சோலைபார்த்தழுதாள்
குத்திக்கொண்டேநான் குடங்கொண்டுநீர்சொரிந்தேன்
குடங்கொண்டுநீர்சொரிந்தேன் கொம்புகளாஅப்போது
பாவிவருவேனென்று பாலைப்பூகாய்த்தீர்களோ
தோஷிவருவேனென்று துக்கமற்றுகாய்த்தீர்களோ
வாருங்கள்மக்களா வரிசையாஎனபிறகே
என்றுசொல்லிநல்லதங்காள் இயலாயுரைக்கையிலே
தண்ணீரென்றுசொல்லி தவிக்குதுபாலரெல்லாம்
அன்னமென்றுசொல்லி அலையுதுபாலரெல்லாம்
காரைப்பழம்பறித்து கைரொம்பஅள்ளியிட்டாள்
சூரைப்பழம்பறித்து இட்டாளேமக்களுக்கு
தொரடிபழம்பறித்து தாங்காதேமக்களென்றாள்
கானலுறைக்குதென்று கையாற்குடைபிடித்தாள்
என்னருமைமக்களா என்பிறகேவாருமென்றாள்
அந்தவனந்தாண்டி அப்புறத்தேபோகலுற்றாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையருமெண்ணலுற்றாள்
உற்றுநினைத்தாளே ஒருகோடியோசனையை
பத்தாவின்வார்த்தைதள்ளி பதறிநடந்தோமே
கணவனிடவார்த்தையது கடந்துநடந்தோமே
எங்கேயோவானம் இடித்ததென்றுநானிருந்தேன்
தப்பாதேவானம் தலையிலிடித்ததென்றாள்
ஆகாயவானமது அதிரயிடித்ததுவே
எண்ணறவாசித்து எழுத்தறக்கற்றாலும்
பெண்புத்தியாலல்லவோ பிழைவந்துநேர்ந்ததென்றாள்
சதிகாரப்பாவியைநான் பிறப்பென்றுநம்பிவந்தேன்
பழிகாரஅண்ணனைநான் பலமென்றுநம்பிவந்தேன்
இந்தவுடலோடே இனிமீண்டுபோவோமானால்
பலருஞ்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசுவார்கள்
சதுரோர்சிரிப்பார்கள் சரியொத்தரேசுவார்கள்
இந்தவுடலோடே இனியிருக்கலாகாது
வாங்களடாமக்களா வழியாவழிநடந்து
மாண்டுமடிவோமென்று மங்கைமனந்தெளிந்து
செத்துமடிவோமென்று சேயிழையாள்மனந்துணிந்தாள்
வாங்களடாமக்களா வரிசையாயென்பிறகே
என்றுசொல்லிநல்லதங்கா ளியலாகவழிநடந்து

அவளந்தவனந்தாண்டி அப்புறத்தேபோகலுற்றாள்
வேறேயொருகானகத்தில் மெல்லியரும்வந்துநின்று
கானகத்தில்பலசிறுவர் காராவைமேய்த்திருப்பார்
மாடுமேய்க்கும்பிள்ளைகட்கு மகராசியேதுசொல்வாள்

### நல்லதங்காள் இடையரைப் பாழுங்கிணறு இருக்குமிடம் கேட்கல்

மாடுமேய்க்கும்பிள்ளைகளா மாட்டாஞ்சிறுதம்பியரே
ஆடுமேய்க்கும்பிள்ளைகளா அறியாதபாலகரே
பச்சரிசிநான்தாரேன் பால்தாரேனுங்களுக்கு
கச்சாயம்நான்தாரேன் கண்ணாட்டிமக்களென்றாள்
பாழுங்கிணறென்று பார்க்கிலையோதம்பியரே
இருண்டகிணறென்று காண்கிலையோயெந்தனுக்கு
அப்போதுமாட்டிடைய ரறிவாளரேதுசொல்வார்
பாழுங்கிணறுனக்கேன் பத்தினியேசொல்லுமென்றார்
இருண்டகிணறுனக்கேன் என்தாயேசொல்லுமென்றார்
அப்போதுநல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
தண்ணீர்தாகமப்பா தாங்கமுடியவில்லை
தண்ணீர்குடிக்கவேணும் தாகவிடாய்தீரவேணும்
கட்டமுதுண்ணவேண்டும் களையாறவேண்டுமென்றாள்
அப்போதுஆட்டிடைய ரரிவையர்க்கேதுசொல்வார்
அறுகுபடர்ந்திருக்கும் ஆழமுள்ளபாழ்கிணறு
கோவைபடர்ந்திருக்கும் கொடிதானபாழ்கிணறு
எதிரேயிருக்குதம்மா ஏற்றமுள்ளபாழ்கிணறு
என்றுமேசொன்னபின்பு ஏந்திழைநல்லதங்காள்
அந்தவிடந்தாண்டி அரிவையும்வாராளே
பாழுங்கிணற்றருகே பத்தினியாள்வந்துநின்று
இருண்டகிணற்றருகே யிளங்கொடியாள்வந்துநின்று
மைந்தரைப்பார்த்துமல்லோ மங்கையருமேதுரைப்பாள்
பாழுங்கிணற்றைப்பார்த்து பாலகரேநீர்பயந்தீர்
இருண்டகிணற்றிறற்ள யெடுத்துவளர்த்திட்டேனே
மாளவோயிங்குவந்தாய் மாபாவிப்பட்டணத்தில்
மன்னவர்கேட்டுவிட்டால் மாண்டுமடிந்திடுவார்
கொற்றவர்கேட்டாக்கால் கூடிமடிந்திடுவார்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
அண்ணன்கொடுத்ததொரு பட்டாடைமடித்துவைத்தாள்
அண்ணிகொடுத்ததொரு தேங்காயைமேலேவைத்தாள்
பாலூட்டும்பாலாடையைப் பத்தினியாளங்கேவைத்தாள்
மோர்குடிக்கும்பாத்திரத்தை மொய்குழலாளங்கேவைத்தாள்
தாமரையிலைகள்கிள்ளித் தாலிக்கழற்றிவைத்தாள்

மாளிகையிலுள்ளியல்லோ மங்கிலியம்வாங்கிவைத்தாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையுமேதுசொல்வாள்
மங்கிலியமிவ்விடத்தில் மலையாய்சமையவேண்டும்
ஓங்கிவளரவேண்டும் ஒருகல்லாய்ச்சமையவேண்டும்
பத்தினியாள்சொல்லையிலே பாராங்கல்லாகினதாம்
உத்தமியாள்சொல்லையிலே ஒருகல்லாய்நின்றுதங்கே

## நல்லதங்காளும் பிள்ளைகளும் கிணற்றில் விழுந்திறத்தல.

அப்போதுநல்லதங்கா ளரிவைவிளங்கொடியும்
மாளுகிறேனென்றசொல்லி மலையேறித்தெண்டனிட்டாள்
சத்திவலம்வந்து சூரியனைத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டபிற்பாடு தேவியிளங்கொடியும்
ஒவ்வொருமக்களாய் தள்ளினாள்கங்கையிலே
ஐந்துபிள்ளை ஒருபெண்ணை அடுக்காகத்தளளிவிட்டாள்
அப்போதாய்க்குதலைமகனும் தானாகவோடிவிட்டான்
ஓடியதலைமகனும உத்தமிக்கேதுரைப்பான்
தாயேநீநல்லதங்காள் தயவாகக்கேளுமம்மா
தப்பிப்பிழைத்திடுவேன் தாயார்போசொல்லுகிறேன்
ஒடிப்பிழைக்திடுவேன் உனபேரைச்சொல்லுகிறேன்
எள்ளுந்தண்ணீருமம்மா இறைத்துவருவேனம்மா
திங்கள்திவசங்கள் பண்ணிவருவேனமமா
என்னைத்தான்கொல்லாதே யென்னைப்பெற்றமாதாவே
ஒருபிள்ளைபெற்று உலககதையாளலையோ
ஏழுபிள்ளைபெற்றுமல்லோ யேழைமதியானையம்மா
மாடுமேய்த்துகஞ்சியானல் குடிபபேனேமாதாவே
என்னைத்தான்கொல்லவேண்டாம் எனைப்பெற்றமாதாவே
போனதெல்லாம்போகட்டும் இருவர்பிழைத்திடுவோம்
அப்போதுநல்லதஙகா ளரிவையெடுத்துரைப்பாள்
அறுவர்கள்தன்னுயிர்க்கு அதிமோகமுயிர்தான்
நாமோடிப்பிழைததாலும் ஒருவரிலலையென்பார்கள்
தப்பிப்பிழைத்தாலும் தாயற்றபிள்ளையென்பார்
கண்டோர்சிரிப்பார்கள் காசினியோரேசுவார்கள்
பார்த்தோர்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசுவார்கள்
வலதோர்சிரிப்பார்கள் வாயுள்ளோரேசுவார்கள்
வாடாயப்பாயென்மகனே கூடயிறந்திடுவோம்
என்றுமேநல்லதங்கா ளிடையரைத்தானழைத்து
கூடிப்பிடியுமென்றாள் கொற்றவனார்தன்மகனை
ஓடிப்பிடியுமென்று ளுத்தமியாள்தன்மகனை
கொச்சையிடையரெல்லாம் கூடிப்பிடித்துவந்தார்



பாழுங்கிணற்றைக்கண்டு நல்லதம்பி பாதவித்தல்.

வந்ததோர்பிள்ளைதன்னைத் தள்ளினாள்கங்கையிலே
தள்ளினபிற்பாடு தனியாகநல்லதங்காள்
பார்ப்பாருடையபுத்திப் பத்தினியாள்நல்லதங்காள்
தானுஞ்சலியாமல் தண்ணீரில்போய்விழுந்தாள்
அப்போதுகங்காதேவி மூன்றுபிழைபொறுத்தாள்
மூன்றுபிழைபொறுத்து மூக்காலும்பொங்கிவிட்டாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
தண்ணீர்தவளையைப்போல தானுமிதக்கலுற்றாள்
பச்சைகிளிபோலே பறக்கிறாள்பாழ்கிணற்றில்
அவளுடையகூந்தலது அறுபதுபாகமது
அறுபதுபாகங்கூந்த லலையுதுகங்கையிலே
இப்படியாக யிவளிருக்கும்வேளையிலே
வேட்டைக்குப்போயிருந்த விருதுள்ளராசனுக்கு
தோள்கள்துடிக்கிறதும் துற்குறிநேருவதும்
இயலானகண்களுக்கு ஈவந்தடிக்கிறதும்
ஆடுந்தொடைகளெல்லா மப்போபறந்திடுமாம்
பட்டணத்துயானையங்கே பதறிக்கவிழ்ந்திடுமாம்
யானையுஞ்சேனையும அத்தனையுந்தானமடிந்து
குதிரைபரிவாரம் கோடிதளந்தானிறந்து
இப்படியாக யிடறுகள்நேர்ந்தபின்பு
ஒற்றைநாய்தன்னுடனே உள்ளம்நைந்துவீடுசேர்ந்தான்

## மூளியலங்காரி தன்கணவனுக்கு கள்ள உபசாரணை செய்தல்

அப்போமூளியலங்காரி மூதேவிசண்டாளி
பத்தாவுக்குபசாரணை பைங்கிளியுஞ்செய்யலுற்றாள்
ஆளனுக்குபசாரணை ஆரணங்குசெய்யலுற்றாள்
கெண்டிகையில்தண்ணீரும கொண்டுவந்தாள்பன்னீரும்
பன்னீரால்காலலம்பிப் பட்டாலடிதுவட்டி
சரணஞ்சரணமென்று சாய்ந்தாள்திருமுடியை
பாதஞ்சரணமென்று பத்தாவைதெண்டனிட்டாள்
தண்ணீர்குடியும்பத்தா தாகவிடாய்தீரும்பத்தா
வெந்நீர்குடியும்பத்தா விடாயாற்றிக்கொள்ளுமென்றாள்
அப்போதுநல்லதம்பி அவளுக்கெடுத்துரைப்பான்
மூளியலங்காரி மூதேவிகேட்கத்துரைப்பான்
தண்ணீர்குடிப்பேனடி விடாயாறிக்கொள்ளுவேனுன்
நல்லதெனுடன்பிறந்த நல்லதங்காள்நாயகியை
காட்டிலேகண்டேன்பெண்ணை வீட்டுக்கனுப்பிவைத்தேன்
எழுபிள்ளைநல்லதங்கா ளிங்குவந்தாளெங்கேயென்றாள்
என்பிறப்புநல்லதங்கா ளிங்குவந்தாளெங்கேயோடி

என்றுரைக்கநல்லதம்பி எடுத்துரைப்பாள்நாயகியாள்
கண்டதுகண்டாற்போல் கணவற்கெடுத்துரைப்பாள்
வந்தாளிருந்தாள்பத்தா வண்ணப்பாய்போட்டேன்பத்தா
மக்களுடனேவந்த வரவைக்கண்டுநானும்போ
கால்கண்டநேரத்தில் சடுகவுலையும்வைத்தேன்
முனைமுரியாப்பச்சரிசிதனை மலைபோலநான்சமைத்தேன்
வாழைக்காய்கொய்தேன் வழுதலங்காய்காம்பரிந்தேன்
ஈழைப்பலாக்காயை யிருமுள்ளுபோக்கடித்தேன்
கத்திரிக்காய்கொய்தேனே கருணைக்குழம்புவைத்தேன்
முள்ளிக்காய்கொய்தேனே முருங்கக்காய்நானசமைத்தேன்
பச்சென்றகீரையொன்று பசுவெண்ணெய்போல்சமைத்தேன்
பத்துவிதகறியும் பாங்கானபச்சடியும
எட்டுவிதக்கறியும் இயலானபோசனமும்
அடுக்கடுக்காய்கறிக ளன்பாகநான்சமைத்தேன்
உன்னுடன்தான்பிறந்த உத்தமிபாள்நாயகியும்
ஏழுபிள்ளைதனக்கும் இளங்கொடியாள்நாயகிக்கும்
பெரியகலமெடுத்தேன் பிள்ளைகட்குச்சோறமிட்டேன்
சின்னகலமெடுத்தேன் சிற்றடிக்குசோறமிட்டேன்
சுத்திக்கறியும்வைத்து சொப்புதயிர்முனனேவைத்தேன்
அள்ளிப்பருப்புமிட்டு அதுகொண்டநெய்சொரிந்தேன்
உண்ணுங்களென்றுசொல்லி உபசரணைசெய்துநின்றேன்
தின்னுங்களென்றுசொல்லி தெருவாசலகாத்திருந்தேன்
அப்போதுநல்லதங்காள் அரிவையிளங்கொடியும்
உண்டுபசியாறி யுறிகட்டில்வீற்றிருந்தாள்
அரிபிளவுவெற்றிலையும் அள்ளியேநான்கொடுத்தேன்
தாம்பூலந்தரித்து தயவாகநல்லதங்காள்
சொக்கட்டான்சதுரங்கந் தோகையருந்தாளுடி
காற்றடிக்குமண்டபத்தில் காரிழையாள்வீற்றிருந்தாள்
தூக்கம்வருகுதென்று துன்னீலக்கண்ணாளும
பாங்கியரைததானழைத்துப் பள்ளியறைசோடியென்றேன்
தாமக்கருங்குழல்மார் தாதியர்களோடிவந்து
சொர்ணப்பொன்கட்டிலிட்டுச் சோடித்தார்தாதியர்கள்
தங்கப்பொன்கட்டிலினமேல் தருக்குமல்லிபூச்சொரிந்தார்
பளிங்குமாமண்டபத்தில் பாங்கியர்விரித்துத்தறி
தெண்டிகையுமபூமடலும் கொண்டுவந்துவைத்தார்கள்
பள்ளிகொள்ளுமெனறுசொல்லி பாவையற்குதெண்டனிட்டார்
அப்போதுநல்லதங்கா ளரிவையெழுந்திருந்து
வஞ்சணைமெத்தையிமேல பள்ளிகொண்டாள்பாவையரும்
சாதிமணிக்கவுரி சந்தனத்தாலுதுவத்தி
கோவைபணிக்கவுரி குங்குமத்திலூட்டிவைத்து
வீசினார்தாதியர்கள் மெல்லியர்க்கிருபுறமும்

கவரிபரிமாறக் கட்டழகிதூங்கினளே
தூங்கினள்மூன்றுசாமந் துன்னிலங்கண்ணாளும்
பொழுதுசரிந்ததென்று பொற்கொடியைத்தானெழுப்ப
தூங்கிமிகத்தெளிந்து துரிதமுடன்நல்லதங்காள்
என்னையேதானோக்கி யிளங்கொடியாளேதுசொல்வாள்
நாத்தினாரேநாத்தினாரே நலமாகவெந்தனுக்கு
உண்ணக்கலமில்லையென்று உத்தமியாள்தானுரைத்தாள்
அப்போதுநான்தானும் அரிவையிளங்கொடியும்
அண்ணியரே அண்ணியரே அண்ணனிடதேவியரே
அண்ணனரண்மனையை ஆளவந்தமதனியரே
எனக்கொருசேலையென யிருசேலைநான்கொடுத்தேன்
முத்துவர்ணச்சேலையது மூன்றெடுத்துநான்கொடுத்தேன்
பச்சைவர்ணச்சேலையது பத்தாவேநான்கொடுத்தேன்
அழகுபணிகொடுத்தேன் ஆபரணம்நான்கொடுத்தேன்
தங்கப்பணிகொடுத்தேன் தகுந்தபொருள்கைகொடுத்தேன்
சிலவுக்கோராயிரம்பொன் சிறப்பாகநான்கொடுத்தேன்
பாலர்விளையாடப் பம்பரங்கள்நான்கொடுத்தேன்
சிறுவர்விளையாடச் சிங்காரத்தேர்கொடுத்தேன்
மாமிவீடுபோவதற்கு மச்சுரதங்கேட்டாள்
ஆளன்வீடுபோவதற்கு அழகுரதங்கேட்டாள்
அத்தனையும்நான்கொடுத்தே னன்பானநாத்தியற்கு
கேட்டதெல்லாம்நான்கொடுத்தேன் கிளிமொழிமாதருக்கு
பாவையிளங்கொடியாள் பத்தினியாள்பாலரெல்லாம்
பாப்பாரவீதியெல்லாம் பந்தாடிவந்தார்கள்
செட்டித்தெருவெல்லாம் செண்டாடிவந்தார்கள்
நீகளைத்துவருவாயென்று கடுசகுடமெடுத்தேன்
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குப்போயிருந்தேன்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
இருந்தாளெழுந்திருந்தாள் இன்னவிடம்நானறியேன்
போனவிடம்நானறியேன் போயிருந்ததாவறியேன்
அப்போபந்தம்பிடித்துபத்தா பலதெருவுந்தேடிவந்தேன்
காடெல்லாந்தேடிவந்தேன் உடம்பெல்லாம்நோகுதிப்போ
ஆனாலழகுமன்னா ஆளமேனெந்தனுக்கு
ஒருபானைஜலம்வைத்துத் தருவாயோஎன்கணவா
என்றுசொல்லக்கேட்டுமன்னன இயலாகநல்லதம்பி
ஆங்காரக்கோபமுடன் ஆனந்தவாழ்மார்பன்
மூளிபலங்காரி மூதேவிசண்டாளி
இந்தமர்மமெல்லாம் எனக்குத்தெரியவரும்
என்பிறவிநல்லதங்காள் எங்கேதான்போனாளிப்போ
நீயித்தனைசெய்திருந்தால் எங்கேதானபோனாளிப்போ
நானறிவேனறிவேனுன் னாங்காரவார்த்தையெல்லாம்

உன்கர்வவித்தையெல்லாம் கண்டறிவேனிப்போது
போதுமடியிவ்வார்த்தை பொற்கொடியேகட்டிவையும்
இவ்வளவுசெய்திருந்தால் ஏன்போனாள்நல்லதங்காள்
கொஞ்சவுபசாரம கூறவந்தாயெந்தனுக்கு
கள்ளவுபசாரம் காட்டவந்தாயெந்தனுக்கு
என்பிறவிநல்லதங்காள் எழுந்துபோனவழியறியேன்
என்றுசொல்லித்தானெழுந்தா னியலானநல்லதம்பி
அரண்மனைஏழுகட்டும் அந்தப்புறந்தாண்டி
தேரோடும்வீதி தெருவீதிதான்கடந்து
அண்டையசல்பெண்டுகளே அக்கமாரேதங்கையரே
எதிர்வீட்டுப்பெண்டுகளே எனைப்பெற்றதாய்மாரே
ஆரடிதங்கையரே அசல்வீட்டுநங்கைமாரே
என்பிறப்புநல்லதங்கா ளிங்குவரக்காண்கிலையோ
ஏழுபிள்ளைநல்லதங்காள் இங்குவரக்காண்கிலையோ
அசலவீட்டுதங்கைமார்க ளரிவையெடுத்துரைப்பார்
வந்தாளேவந்தாளே மதனியார்மாளிகைக்கு
வந்ததேபோதுமப்பா மாபாவிவாசலுக்கு
அவள்பண்ணாதகோலமெல்லாம் பண்ணினாளுன்தேவி
வந்தவுடனேயவள் வாசற்கதவடைத்தாள்
ஓடிக்கதவடைத்து ஒருமட்டாய்மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்தாள் தாள்பூட்டிமண்ணறைந்தாள்
ஈரமண்கொண்டுவந்து இருபக்கந்தானறைந்தாள்
குழந்தைகுடிப்பதற்கு கூழுங்கிடையாதென்றாள்
பசியதுதான் தணிக்க பச்சைஜலமில்லையென்றாள்
களைகள்தெளிவதற்குக் கரண்டிஜலமில்லையென்றாள்
செய்யாதகோலமெலலாம செய்துவைத்தாளுன்தேவி
கவிழ்ந்ததிருமுகத்தைக் கண்ணெடுத்துப்பாரேனென்றாள்
பண்ணாதகோலமெல்லாம் பண்ணினாளுன்தேவி
கொணறைகள்வைத்திருக்கும் கோணாதசாலைவழி
அருமைமக்களெழுவருடன் ஆத்தாளும்போய்நடந்தாள்
போனதோர்சேதிதன்னைப் போமன்னன் தானறிந்து
தங்கையும்போனவழி தானுமறியவில்லை
என்றுமேநல்லதம்பி இயலாகவேதுசொல்வான்
கன்னிநல்லதங்கையைநான் காட்டிலேகண்டழுதேன்
வீட்டுக்குவந்ததொரு மெல்லியரைநானறியேன்
ஏதேதுசெய்தாளோ என்னுடையபெண்சாதி
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மருந்துதான்வைத்தாளோ மாயப்பொடிபோட்டாளோ
ஈடுதான்வைத்தாளே என்னவகைசெய்தாளோ
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானினைந்து
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசெய்தான்

## நல்லதம்பி நல்லதங்காளைக் காட்டில்தேடுதல்.

அப்போ ஒற்றைநாயோடேயல்லோ ஓடுகிறான்நல்லதம்பி
ஓட்டமாயோடும்போது உத்தமனார்வீரியற்கு
மீசைதுடிக்கிடுமாம் வெகுகோபம்வந்திடுமாம்
கண்கள்சிவந்திடுமாம் காந்தாளம்வந்திடுமாம்
பக்கச்சதைகளெல்லாம் பம்பரம்போலதுடிக்கும்
ஆடுந்தொடைகளெல்லாம் அம்பாய்ப்பறந்திடுமாம்
ஆவாரக்கொத்ததனை அடையாளந்தான்பிடித்தான்
கணையாழிமோதிரத்தை கண்டுமேதானெடுத்தான்
எடுத்துமேநல்லதம்பி இயலாகத்தானினைப்பான்
இந்தவழியில்தானே யிவளுமிருக்கவேண்டும்
என்றமேகுதிரைவிட்டானே இன்பமாய்நல்லதம்பி
குதிரைவிடும்போது கொற்றவனுமேதுசொல்வான்
மாடுமேய்க்குந்தம்பியரே மட்டாஞ்சிறுபாலகரே
ஆடுமேய்க்கும்பிள்ளைகளா அரியாதபாலகரே
கன்றுமேய்க்கும்பிள்ளைகளா காட்டிடையசிறுவர்களா
என்பிறப்புதங்கையவளிங்குவரக்கண்டதுண்டோ
ஏழுபிள்ளைநல்லதங்காளிங்குவரக்கண்டதுண்டோ

## இடையர்கள் நல்லதம்பிக்கு நல்லதங்காள் போனவழிகாட்டுதல்

அப்போதுமாட்டிடையர் அரியவெடுத்துரைப்பார்
வந்தாளிருந்தாளையா வழிமார்க்கம்போனாளையா
உங்கள்குலமென்றறியோம் உடன்பிறவியென்றறியோம்
இருட்டுக்கிணறொன்று எந்திழையுங்கேட்டாளே
காட்டிக்கொடுத்தோமையா காரிழையாள்நாயகிக்கு
அப்படிச்சொல்லுகையில் அன்பானநல்லதம்பி
நீங்கள்காட்டிக்கொடுக்கலாமா கடக்கப்போய்நிற்கலாமா
பார்த்துமிருந்தீர்களா பழிகாரப்பாவிகளா
எனக்குப்பிறப்பொழிய உனக்குப்பிறப்பலவோ
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானடந்தான்
காடுசெடிகளெல்லாம் கனக்கவேதேடிவாரான்
ஆறுசுனைகளெல்லாம் அங்கங்கேதேடிவாரான்
குட்டை குளங்கண்டாலே குதித்திறங்கிதேடிவாரான்
துறவுகளைக்கண்டாலே கிளம்பிக்குதித்திடுவான்
வழியிலிப்படித்தேடி வருகின்றவேளையிலே
நல்லதங்காள்விழுந்த நற்கிணற்றின்முன்னேவந்தான்
பாலூட்டும்பாலாடை பாவையடையாளம்
மங்கிலியம்கண்டானே மன்னனந்தநல்லதம்பி

## நல்லதங்காள் கிணற்றில் விழுந்திறந்ததைக்கண்டு நல்லதம்பி பரதவித்தல்.

அப்போ-பாழுங்கிணற்றருகே பார்த்துவயிறெரிந்தான்
இருண்டகிணற்றருகே யேங்கிமனந்தளர்ந்தான்
தங்கைதங்கையென்றல்லவோ தரையிற்புரண்டழுதான்
அம்மாடிஎன்றல்லவோ அடித்துப்புரண்டழுதான
முத்துப்போல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டு
பவளம்போல்கண்ணீரைப் பக்கமெல்லாஞ்சோரவிட்டான்
பம்பைமயிரையெல்லாம் பாழ்கிணற்றிற்பிச்செறிந்தான்
ஐயோசிவனேயென்று அடித்துப்புரண்டழுதான
ஓடிக்குதித்தானே உத்தமியாள்கங்கையிலே
தாண்டிக்குதித்தானே சுயவானகங்கையிலே
உடற்பிறந்தார்பிள்ளையெல்லாம் ஓடியெடுக்கலுற்றான்
தன்பிறப்புபிள்ளையைத் தாவியெடுக்கலுற்றான்
தங்கையைமெள்ளவல்லோ தடவியெடுத்தானே
வாரியெடுத்துவைத்து வண்ணமடிமேலே
முகத்தோடேமுகமணைத்து முத்தமிட்டுக்கொண்டானே
செத்தப்பிணத்துக்குச் சீரிட்டுபார்த்தழுதான்
மாண்டபிணத்துக்கு வரிசையிட்டுபார்த்தழுதான்
நாவற்பழமோதான நல்லதங்காள்பெற்றபிள்ளை
கோவைப்பழமோதான் கொம்பனையாள்பெற்றபிள்ளை
கையொத்தபாலகண்டி கண்ணாட்டிபெற்றபிள்ளை
ஈச்சம்பழமோதான என்னுச்சிபெற்றபிள்ளை
கைக்கேற்றபாலகண்டி கண்ணாட்டிபெற்றசெல்வம்
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானுமப்போ

## நல்லதம்பி நல்லதங்காளையும் பிள்ளைகளையுந் தகனஞ்செய்தல்.

தங்கையைத்தானெடுத்து தகனஞ்செய்யவேணுமென்று
ஊதாரிதன்னாலே உடற்பிறப்புநானிழந்தேன்
மாபாவிதன்னாலே மருமகனைநானிழந்தேன்
பெண்சாதிதன்னாலே பெண்பிறப்பைநானிழந்தேன்
ஊரிலநெருப்பெடுத்தா லூலகோர்சிரிப்பாரென்று
காட்டில்விறகுகொண்டால் நல்லார்சிரிப்பாரென்று
சந்தனக்கட்டைகொண்டு சதுராய்பிளந்தடுக்கி
குங்குமக்கட்டைகொண்டு குளிரப்பிளந்தடுக்கி
சந்தனக்கட்டையிலே தங்கையரைத்தானவளர்த்தி
குங்குமக்கட்டையிலே குழந்தைகளைத்தான்வளர்த்தி
வரப்பேரிநெல்லதனை வாய்க்கரிசிபோட்டானங்கே

செண்பகமாலை சிவமாலைவந்திடுமாம்
மல்லிகைமாலைகொண்டு மன்னனலங்கரித்து
சுற்றிவந்துகொள்ளிதனை வைத்தானேதோகையற்கு
வலம்வந்தழுதுகொள்ளி வைத்தானேநல்லதம்பி
நெருப்புப்பிடிக்கவில்லை நீறுப்ச்சமையவில்லை
அக்கினியும்பற்றவில்லை அனலாய்ச்சமையவில்லை
ஏண்டியம்மாதங்கையரே இத்தனைகோபமென்ன
என்மேலேகோபமது வைக்காதேஎன்பிறப்பே
பற்றியெரிந்தாயானால் பழிகளைவாங்கிடுவேன்
ஓங்கியெரிந்தாயானால் உயிர்களைவாங்குவேனான்
நாளைப்பகலுக்கு நான்வாரேன்தங்கையரே
இப்படிச்சொல்லியண்ணன் இரண்டடிதானடந்தான்
நடந்தவன்போனபின்பு நாயகியாளக்கினிதான்
குப்பென்றுதானெழுந்து கொழுந்துவிட்டெரிந்திடுமாம்
இப்படியாக இருக்கினறவேளையிலே

நல்லதம்பி நல்லதங்காளைத் தகனஞ்செய்து
வீடுவந்துசேர்தல்.

நல்லதம்பியப்பொழுது நலமாகத்தன்மனையில்
எட்டுநாள்துக்கமன்னன் இயல்பாய்சிறைகாத்து
அறுகுபொறுக்கியண்ணன் அலாத்தலைமுழுகி
முக்காட்டையிட்டுராஜன் மூலையிலேபோய்படுத்தான்
அப்போ-மூளியலஙகாரி மூம்தவிசண்டாளி
தன்னுடையபத்தினியாள் தன்னெதிரேவந்துநின்று
ஆளன்முகமநோக்கி ஆணழகியேதுசொல்வாள்
ஏன்காணும்ராஜமன்ன எந்தன்மேற்கோபமென்ன
பொல்லாததங்கையவள் போனாலும்போய்ப்போருள்
ஆகாதநல்லதங்கா ளவள்போனாற்போய்ப்போருள்
நீ-காலின்மிதியடியைக் கழற்றிவைக்கலாகாதோ
கொண்டுவந்தவேட்டைகளைக் கூறிடலாகாதோ
அப்போதுநல்லதம்பி ஆளனெடுத்துரைப்பான்
எனக்கும்உனக்குமபெண்ணே எட்டுமாதம்விரதமுண்டு
என்-வருத்தந்தொலைந்தாலே மாதேநானுண்டிடுவேன்
உனக்குமெனக்கும்பெண்ணே ஒருபிள்ளையுண்டலவோ
நம்முடையபிள்ளைக்கு நலமாகவிப்பொழுது
கலியாணஞ்செய்யவேண்டும் கண்குளிரப்பார்க்கவேண்டும்
கண்ணுள்ளபோதேபெண்ணே கண்காட்சிகாணவேண்டும்
என்று-மூளியலங்காரி மூதேவிநாயகிமேல
மன்னவனார்நல்லதம்பி மார்மந்தொடுத்தானே
கலியாணகாரியத்தைக் கடுகவேசெய்யவென்று

## நல்லதம்பி பிள்ளைக்குக் கலியாணஞ்செய்ய பந்தலலங்கரித்தது

சாந்தால்தரைமெழுகி சங்கணத்தில்கோலமிட்டு
கரும்பாலேகால்நிறுத்தி அரும்பாலேபந்தலிட்டார்
முத்துமிரண்டாய்பிளந்து முகூர்த்தக்கால்சொப்பனிட்டார்
பவளமதைப்பிளந்து பந்தற்காலலங்கரித்து
தேக்குமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வாழைமரம்பிளந்து வாசற்காலலங்கரித்தார்
இட்டார்கள்பந்தலங்கே இருநூற்றுங்காதவழி
தொட்டார்கள்பந்தலங்கே தொண்ணூற்றுக்காதவழி
ஓலையால்பந்தலல்லோ உத்தமர்க்குத்தானுமிட்டார்
நல்லதம்பிசேனைகட்கு நலமாகப்பந்தலிட்டார்
தன்னுடையசேனைகட்குத் தகுமானபந்தலிட்டார்
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசெய்தான்
கல்தச்சரையழைத்துக் கட்டழகனேதுசொல்வான
தச்சர்களேதச்சர்களே தகுமானதச்சர்களே
என்வார்த்தைகேளுங்களெனக்கிசைந்ததச்சர்களே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
எந்தனுடன்பிறந்த எனக்கிளையாள்நல்லதங்காள்
ஏழுபிள்ளைநல்லதங்காளென்வீடுவந்தவிடத்தில்
பசித்தமுகம்பார்த்து பாலடைப்பால்வாராததால்
களைத்தமுகம்பார்த்து கரண்டிப்பால்வாராததால்
என்தங்கைநல்லதங்காளேந்திழையுங்கோபமாகி
கோபம்பொறுக்காமல் கொம்பனையுந்தானடந்து
பிள்ளைகளுந்தானுமாக போய்குதித்தாள்பொய்கையிலே
மக்களுந்தானுமாக மாண்டாளேபெருந்துறவில்
அப்படிசெய்ததொரு அரும்பாவியென்மனையாள்
என்மனையாள்சேனைகட்கு இடிபந்தல்போடுமென்றான்
கற்பந்தல்போட்டு கவிழ்க்கதுவிடுசேனைகளை
அந்தவுரைகேட்டு அழகுள்ளதச்சரெலலாம்
அரும்பாவிசேனைகட்கு அழகுபந்தல்சொப்பனிட்டார்
பெரும்பாவிசேனைகட்கு பெலததகல்லாற்பந்தலிட்டார்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கு
ஆணழகனல்லதம்பி அனர்த்தம்வரப்பந்தலிட்டான்
சூத்திரப்பந்தல் சுழற்பந்தல்தானுமிட்டான்
கல்லாலேபந்தலது கலகமவரத்தானுமிட்டான்
தன்னுடையசேனைகட்கு தென்னோலைபந்தலிட்டான்
பந்தலிட்டபிற்பாடு பார்மன்னனேதுரைப்பான்
மன்னவனல்லதம்பி மர்மமாயேதுரைப்பான்
மூளியலங்காரி மூதேவிநாயகிக்கு



நல்லதம்பி பிள்ளைக்கு கல்யாணம்.

படுபாவிகாயசிக்கு பட்சமாயேதுரைப்பான்
உங்கள்மனிதருக்கு உகந்துநீபாக்கனுப்பு
எங்கள்மனிதருக்கு யான்பாக்கனுப்புகிறேன்
என்றுரைத்துநல்லதம்பி எல்லோர்க்கும்பாக்குவைத்தான்
கப்பல்கடந்து கடலேறிப்பாக்குவைத்தான்
வற்றிக்கிடந்ததொரு வாகானகாவேரி
காவேரிவிரமபியங்கே கரைபிரண்டுவந்ததுபோல்
பூரித்திருகோளும் பொன்னுபரணமின்ன
மாட்டின்மேல்பாக்குமங்கே மனிதருக்குப்போகவிட்டான்
சின்னமடிகோலி சீமையெங்கு பாக்குவைத்தான்
பெரியமடிகோலி பூமியெங்கும் பாக்குவைத்தான்
கலியாணமென்றுசொல்லி கடலேறிப்பாக்குவைத்தான்
இப்படியாகப்பாக்கு இன்பமாய்வைத்தபின்பு
தன்னுடையசேனைகட்குத் தாம்பூலம்வைத்தபின்பு
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
ஜாதிஜனங்களுக்கு தனிப்பாக்குதானளித்தாள்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி

## நல்லதம்பி ஓலையெழுதியனுப்புதல்.

ஆணலழகுமன்னன் அறிவுள்ளநல்லதம்பி
என்னவென்றுசொல்லி எழுதுவானோலைதன்னை
என்பிள்ளைதம்பியர்க்கு இயலாகவிப்பொழுது
சித்திரைமாதத்திலே சிர்பத்தாந்தேதியிலே
வெள்ளிக்கிழமையிலே விடிந்ததுநாழிகையில்
பகல்முகூர்த்தமென்றுசொல்லி பாங்கானஓலையிலே
மூளியலங்காரி மூதேவிசேனையெல்லாம்
அனைவருந்தாமறிய அவ்வோலையெழுதினனே
கலியாணஓலைதன்னைக் கடுகவேயெழுதினனே
அப்போ-மன்னவனார்நல்லதம்பி மர்மமாஎழுதுகிறான்
அவ்வேடுவிட்டு மறுவேடுதானெடுத்து
என்தங்கைநல்லதங்காள் இளங்கொடியாள்நாயகியும்
கூடப்பிறந்த குலப்பெண்ணுமென்தங்கை
தங்கையும்பெற்றெடுத்த தனஞ்செயர்களேழுபேரும்
பங்குனிமாதத்திலே பதின்மூன்றுந்தேதியிலே
வியாழக்கிழமையிலே விடிந்ததுநாழிகையில்
பாழுங்கிணறுதனில் பத்தினியும்பிள்ளைகளும்
விழுந்திறந்தார்கள் விதியினிடகாரணத்தால்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
அரும்பாவிதன்னாலே அரன்பாதஞ்சேர்ந்தார்கள்

கொடும்பாவிதன்னாலே கொம்பனையாள்தானிறந்தாள்
மாண்டுமடிந்தசேதி வையகத்தார்தாமறிய
செத்துமடிந்தசேதி சீமையுள்ளார்தாமறிய
ஓலையெழுதினானே உத்தமசிகாமணியும்
மாண்டுமடிந்தாரென்று மண்ணோலைஎழுதினானே
ஓலையெழுதியல்லோ உவந்தகுறியுமிட்டு
இறந்தஓலைதானெழுதி இருபக்கம்சுட்டெரிந்து
இருஓலைதன்னையு மிசைவாகத்தானெடுத்து
தூதுவனைத்தானழைத்து சுருக்காயெடுத்துரைப்பான்
ஓலைச்சுருளகொடுத்து உத்தமனுமேதுசொல்வான்
மூளியலங்காரி மூதேவிசேனைகட்கு
கலியாணஓலைதன்னைக் கடுகவேகொண்டுசெல்லும்
என்றுமேநல்லதப்பி இன்பமாய்த்தான்கொடுத்து
கலியாணஓலைதன்னைக் கையிற்கொடுத்தபின்பு
தூதுவரானவர்க்கும் சுருக்காயெடுத்துரைப்பான்
எந்தனதுசேனைகட்கு இறந்தஓலைகொண்டுசெல்லும்
என்றுமேநல்லதம்பி இசைவாகத்தான்கொடுத்தான்
கொடுத்ததைதான்வாங்கி கொப்பெனவேதானடக்க
அரசன்சொல்கடவாமல் அப்பொழுதேபோகலுற்றார்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கும்
நல்லதம்பிதன்னுடைய நலமுள்ளபந்துகட்கும்
ஓலையைத்தான்கொடுத்து உத்தமரும்வந்துவிட்டார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
இருதிறத்துசேனைகளும் இங்கேபயணமென்றார்
மூளியலங்காரி மூதேவிசேனையர்கள்
வருகின்றசந்தோஷ மட்டுமிதங்கவில்லை
பார்க்கமுடியாது பாரிலிடங்கொள்ளாது
காணமுடியாது கட்டுரைக்கலாது
அவர்கள்-தங்ககிரீடமும் தார்வேந்தர்தன்னழகும்
முத்துக்கிரீடமும் முடிமன்னர்சீரழகும்
பவளக்கிரீடமும் பார்வேந்தர்தோளழகும்
உத்தரீயந்தான்புரள உத்தமர்கள்வாராரே
தேரேறிமன்னரெல்லாம் தெருவீதிவாராரே
ஆனையேறிமன்னரெல்லாம் அசைந்துமேவாராரே
கொண்டைமுடியுடனே கொண்டைதாங்கிப்பூவுடனே
அவர்களதுதேவிகளும் அனேகம்பேர்தாதிகளும்
மஞ்சள்குளிப்புடனே மையுடனேபொட்டுடனே
பாங்கிமாரெல்லவரும் பல்லக்குத்தாங்கிவர
வந்துநிறைந்தாராம் வாசலிடங்கொள்ளாமல்
பந்தியாயுட்கார்ந்தார் பந்தலிடங்கொள்ளாமல்
இவனுடையசேனைகள் இப்படியாயிருக்க

ஆணழகநல்லதம்பி அவனுடையசேனைக்கு
இவனுடையமனிதருக்கு இறந்தஓலைவந்தபின்பு
ஓலைச்சுருளபடிக்க உடன்பிரித்துபார்த்தார்கள
நாமக்கருங்குழலாள் நல்லதங்காள்மாண்டாளென்று
நாமமுடியழகன் நல்லதம்பிராசாவின்
சேனைகளத்தனையுஞ் சேர்ந்துமிகவழுதார்
முட்டியழுதார்கள் முகத்திலறைந்துகொண்டு
அவரவர்கடகக்கையா லடித்துக்கொண்டுதானழுதார்
மார்பிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதார்
போய்பார்ப்போமென்றுசொல்லி புண்ணியாகள்வாரார்கள்
கண்டுவருவோமென்று காரிழைமார்வாரார்கள்
வாடிமுகந்தளர்ந்து வண்ணமுகமவேறுபட்டு
இளைப்புங்களைப்புமாக எல்லோரும்வாரார்கள்
அலைகுலையத்தலைகுலைய அனைவோரும்வாரார்கள்
வந்துமேஉள்நுழைந்தார் வாசலிடங்கொள்ளாமல்
நேர்த்தியாய்சமைத்திருக்கும் சூத்திரப்பந்தலின்கீழ்
சூத்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்துநிறைந்தார்கள்

## நல்லதம்பிபிள்ளை தாலிதரித்தல்.

இப்படியாக இருக்கின்றவேளையிலே
நல்லதம்பிபெற்றெடுத்த நாமமுடியானை
சீயக்காய்நெல்லி சிறுபயறுகஸ்தூரி
வாசனைவர்க்கமுடன் வகைவகையாய்க்கொண்டுவந்து
மணவரையின்மேலாக மாப்பிள்ளையைக்குந்தவைத்து
மாப்பிள்ளைபெண்ணுக்கும் மணவரையில்நலங்குமிட்டார்
சீக்கைக்கழித்தார்கள் சீராயிருவருக்கும்
ஸ்நாநங்கள்செய்துவைத்தார் நாமமுடியார்கள்
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாசரீகப்பட்டுடுத்தி
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்புமிட்டு
மாப்பிள்ளையைக்கொண்டுவந்து மன்னரலங்கரித்தார்
அனேகவிதபூஷணத்தா லலங்கரித்தானபின்பு
பொற்கொடிமாரெல்லோரும் பெண்ணையலங்கரித்தார்
இருவரையுங்கொண்டுவந்து இன்பமுள்ளபந்தலிலே
மணவரையின்முன்பாக மன்னவரைக்குந்தவைத்து
அரசாணிமுன்பாக ஆளனைக்குந்தவைத்து
முன்னூறுபார்ப்பார்கள முகூர்த்தமிட்டமங்கிலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கிலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலி கழுத்திலேயென்றுரைத்தார்

அப்போது ஆணழகனப்படியேகட்டலுற்றான்
என்னவென்றுசொல்லி எடுத்தவன்கட்டலுற்றான்
சிவசிவாவென்றுசொல்லி திருக்கழுத்தில்சூட்டினானே
அரகராவென்றுசொல்லி அழுத்தினார்மங்கிலியம
பிரமமுடிமூன்றுமுடி போட்டானபிற்பாடு
அங்கிருந்த னனரெல்லாம் அழகுபட்டங்கட்டினார்கள்
அம்மானமாரெல்லோரும் அடங்கலும்பட்டமிட்டார்
நல்லதம்பிபொற்றெடுத்த நவமணியேதுரைப்பான்
என்-ஐயாவே-ஐயாவே அடியேனொருவார்த்தை
உம்முடன்தான்பிறந்த உத்தமியாள்நல்லதங்காள்
அவளுமொருசீமை யாளுகிறாள்ளன தீரே
அவள்பேரைச்சொல்லி அழகுபட்டம்கட்டுமென்றான்
அத்தைபேரைச்சொல்லி அணியவேவேண்டுமென்றான்
அத்தைபின்பேருரைக்க ஆணழகன்வயிறெரிந்து
பொன்னின்குடமே என்பூபாலராஜாவே
அத்தையைக்கொன்றவளதானரும்பாவியுன்தாயார்
மாமியைக்கொன்றவளதான் மாபாவியுன்தாயார்
என்று-அதிகவயிறெரிந்து அப்போதுநல்லதம்பி
வாளையுருவி மன்னவனுந்தானெழுந்தான்
தகப்பனிடகோபத்தைத் தார்வேந்தன்தான்பார்த்து
அண்ணாவே அண்ணாவே அதிககோபங்கொள்ளாதே
கலியாணவாசலிலே கலக்கங்கள்வையாதே
இக்குலைத்தருக்திர்ங்க ளெனக்குத்தெரியவரும்
அதற்குமேல்சூத்திரங்க ளறிவேன்சாணோன்தகப்பா
இன்னமொருநாழிகையி லங்கேதெரியுதுபார்
மூளியலங்காரி மூதேவிசேனையெல்லாம்
அவளுடையசேனையெல்லாம் அகமாகப்போகுதுபார்
மாதாவின்சேனையெல்லாம் மாண்டுமடியுதுபார
அரும்பாவிசேனையெல்லாம் அடியோடேமாளுதுபார்
மாபாவிசேனையெல்லாம மாண்டுமடியுதுபார்
பதறாதேபதறாதே பட்சமுள்ளவென்தகப்பா
பொறும்பொறுமென்று பொன்னடிக்குதெண்டனிட்டான்
அப்போ-ஆறினன்கோபம அமர்ந்தானகொலுதனிலே
கலியாணச்சடங்குகள் சடுகமுடிந்தவுடன்
மூளியலங்காரி மூதேவிநாயகிக்கு
மன்னவனார்நல்லதம்பி மர்மமாயெடுத்துரைப்பான்
உங்கள்மனிதருக்கு உணவுமேநீபடைப்பாய்
எங்கள்மனிதருக்கு யான்படைப்பேனசாதங்கறி
தன்கணவன்சொன்னபடி சம்மதித்தாள்மூதேவி
அப்போதுபந்திகள் அமர்த்தினார்பந்தலிலே
மூதேவிசேனைகள் மூடிமன்னரததனையும்

சூஸ்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்திருந்தாரெல்லோரும்
நல்லதம்பிசேனையெல்லாம் நலமானபந்தலிலே
பக்கங்கொலுவிருந்து பந்தியமர்ந்தார்கள்
வரிசைவரிசையாக வந்தவர்க்கிலைபோட்டார்
வாழையிலைபோட்டு வட்டித்தார்சாதங்கறி
இவளுடையசேனைக்கும் இவள்பரிமாறிவாராள்
நல்லதம்பிசேனைக்கு நங்கையவளேதுசெய்தாள்
வஞ்சனையாகவல்லோ வட்டிதுவாராளே
வரகரிசிசாதமது வட்டித்தாளப்பொழுது
அகத்திக்கீரைகுழம்பதனை அள்ளியவள்வார்த்து
வஞ்சனைசெய்துமல்லோ வாராளலங்காரி
தங்களிடசேனைக்குத் தகுந்தபடியேதுசெய்தாள்
குத்துப்பருப்புமிட்டாள் கூசாமல்நெய்சொரிந்தாள்
அள்ளிப்பருப்புமிட்டாள் அதுகொண்டுநெய்வார்த்தாள்
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபச்சடியும்
சுத்திக்கறியும்வைதது சொம்புதயிர்முன்னேவைத்தாள்
உண்ணுங்களென்றுசொல்லி உபசாரணைசெய்திருந்தாள்
நல்லதம்பிசேனைகட்கு நடக்குதுயிந்தவிதம்
அப்போ-மூளியலங்காரி மூத்தவிநாயகியும்
தன்னுடையசேனைகட்கு தானபரிமாறிவாராள்
பாவையுடசேனையெல்லாம் பந்தியமர்ந்தார்கள்
அந்தநல்லவேளையிலே அங்கிருந்தசேனையர்கள்
ஆகாததற்குறிகள் அட்சணமேகண்டார்கள்
இருக்கின்றமன்னருக்கு இடதுதோள்துடித்திடுமாம்
வந்திருந்தமங்கையற்கு வலக்கண்துடித்திடுமாம்
வைத்திருந்தசாதங்கறி ரத்தகவுலடிக்கும்
உற்றபதார்த்தவகை உதிரக்கவுலடிக்கும்
அங்கிருந்தசேனையெல்லாம் அவர்களுமேதுசொல்வார்
அப்போதுசேனையர்களடங்கலுமேதுசொல்வார்
என்னமோயேதோ இடிவந்துநேர்ந்திடுமோ
மாளாப்பழிநமக்கு மீளாமல்வந்திடுமோ
தீராப்பழிநமக்குச் சேரவேவந்திடுமோ
என்றுசொல்லிமன்னவர்களேங்கிமனந்தளர்ந்து
சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
என்னமோஏதோவென்று இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதம்பிசேனைகட்கு நன்றாய்படைத்துவாராள்
அகத்திக்கீரைக்குழம்பு அடைவாகத்தான்வைத்தாள்
உண்ணுங்களென்றுசொல்லி உபசாரணைசெய்துவாராள்
சாதமூம்கீரைநல்ல தம்பிசேனைஉண்ணுகிறார்

மூளியுடசேனையெல்லாம் மூப்பழமுஞ்சோறுமாக
முன்சோறுண்டுமல்லோ பின்சோறெடுக்கும்போது

### நல்லதம்பி ஆசாரியைக்கண்டு மூளியலங்காரி சேனையின்பேரில் சுழற்பந்தலைத்தட்டி மடியவைத்தல்.

அப்போதுநல்லதம்பி ஆசாரிக்கெடுத்துரைப்பான்
அண்ணாடா அண்ணாடா ஆசாரி அண்ணாடா
ஆர்காணாமாசாரி அறியவொருவார்த்தை
மூளியுடசேனையெல்லா முழுதுமடிவதற்கு
அவதானப்பந்தலை அடுக்காகதட்டிவிடும்
போய்நீதட்டிவிடும் புத்தியுள்ள ஆசாரி
பந்தலின சூஸ்திரக்கதைப் பார்த்துவிடுமாசாரி
என்றுசொல்லநல்லதம்பி எடுத்துவிட்டானாசாரி
தந்திரமாய்ப்பந்தலையும் தட்டிவிட்டானாசாரி
அவதானப்பந்தலை அங்கேதட்டிவிட்டானே
மூளியுடசேனையெல்லாம முறிந்துமடியுதங்கே
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மூதேவிசண்டாளி மூலையிலேபோய்சேர்ந்தாள்
கையைமுறித்துக்கொண்டு கதவண்டைபோய்ச்சேர்ந்தாள்
என்னசெய்யப்போறேனென்று ஏங்கியழுகலுற்றாள்
ஒற்றைக்குரலிட்டு ஓங்கியழுகலுற்றாள்
மாபாவிசீமையிலே மன்னர்களைத்தோற்றுவிட்டேன்
பெரும்பாவிசீமையிலே பெண்டுகளைத்தோற்றுவிட்டேன்
ஒருகோடிகும்பிழந்து ஒற்றைக்காலாகிவிட்டேன்
இருகோடிகும்பிழந்து இருந்தேனொருபாவி
சூதுசெய்துகொன்றானே துரோகியவனென் கணவன்
கல்லாலேபந்தலிட்டுக் காளைகளைக்கொன்றுவிட்டான்
ஒருத்திவந்துள் நுழைந்து ஒருகோடிகும்பிழந்தேன்
என்று-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நின்றுபுலம்புகையில் சண்டானே ராசமன்னன்
ஆணழகன்நல்லதம்பி அலங்காரிக்கெடுத்துரைப்பான்
பத்துபேரைக்கொன்றபழி காரிக்கெடுத்துரைப்பான்
எட்டுபேரைக்கொன்ற இழிகுலத்தில்வாடியென்று
என்னென்னபக்குவம் இளங்கொடிக்குச்செய்யலுற்றான்
முன்சிகையைத்தான்பிடித்து நல்லமணப்பந்தலிலே
மூக்குஸ்தனமறுத்தான் முத்துமுடிப்பந்தலிலே
கொண்டையறுத்தானங்கே கொத்தோடேதொங்கவிட்டான்
காதையறுத்தானங்கே கழுத்திலேதொங்கவிட்டான்
கண்ணைப்பிடுங்கியங்கே எண்ணையையூற்றிவைத்தான்

இன்னமும்நல்லதம்பி யேதேதுசெய்யலுற்றான்
கழுதையைக்கொண்டுவந்து கட்டழகிமூளியாளை
கழுத்திலெருக்கமாலை கனமாகசூட்டிவிட்டான்
கழுதையின்மேலேற்றிவைத்துக் கைகொட்டித்தானகைத்தான்
சேவகரைத்தானழைத்து தெருவிலிழுங்களென்றான்
கழுதையைக்கைபிடித்து கடுகயிழுங்களென்றான்
அழகுள்ளவீதியெல்லாம் அலகங்கேசுற்றுமென்றார்
நாலுதெருவிலே நாரியவள்கோலம்வந்தாள்
மூன்றுத்தெருவிலே மூதேவிகோலம்வந்தாள்
நாலுங்காலம்வந்தபின்பு நல்லதம்பியேதுசெய்தான்
மூளியலங்காரி மூதேவிதோஷியாளை
சுண்ணாம்புகால்வாயில சுட்டானேசுந்தரியை
சுட்டானேசுந்தரியை சுகமானநல்லதம்பி
இப்படியாக இருக்கின்றவேளையிலே
மனையாளைசுட்டெரித்த மறுநாள்காசிராஜன்
மச்சான்வரவை மன்னவனும்பார்த்திருந்தான்
நல்லதங்காள்நாயகனும் நறகாலந்தான்பிறந்து
காசிராஜனுக்கு காலந்தெளிந்துதங்கே
காலமதுதெளிந்து கனத்தமழைபொழிந்து
சீமையதுதெளிந்து செழித்துமழைபொழிந்து
முப்போகந்தானவிளைந்து முயற்சியுள்ளசீமையிலே
காலந்தெளிந்தது சம்புவிளைந்தது
சீமைசெழித்தது செல்வமழைபெய்தது
நாடுசெழித்தது நல்லமழைபெய்தது
கருப்புதெளிந்தபின்பு காசிராஜனேதுசெய்தான்
தாய்வீடுபோனபெண்ணை தானழைக்கவேணுமென்று
நல்லதங்காள்நாயகியை நாயகனழைக்கவென்று
செட்டிகடைக்குவந்தான் சேலைவிலைமதித்தான்
பார்ப்பான்கடைக்குவந்தான் பட்டைவிலைமதித்தான்
பாரியவளேறிவர பல்லக்குகொண்டுவாரான்
புத்திரர்களேறிவர பொன்கரடிகொண்டுவாரான்
பலபலகனிவகைகள் பாலருக்குகொண்டுவாரான்
சிற்றாடைகொண்டுமன்னன சிறுசதங்கைகொண்டுவாரான்
தாய்வீடுபோனபெண்ணைத் தானழைக்கவாரானே
குதிரைபரிவாரம் கோடிதளமுன்னடக்க
ஆனைபரிவாரம் அடங்கலும்பின்னடக்க
கவிஞர்கவிபாடக் கட்டியங்கள்கூறிவர
ஆனையுஞ்சேனையும் அத்தனையுமுன்னடக்க
எக்காளைதாரூத இடிபாணந்தான்முழங்க
நாகசுரமூத நவிரிநறகொம்பூத
பேரிகைகொட்டிவரப் பெரியசின்னமூதிவர

கத்திகட்டுஞ்சேவகரும் காவலரும்முன்னடக்க
வந்துநிறைந்தார்கள் வாசலிடங்கொள்ளாமல்
நல்லதம்பிக்குக்காசி நாட்டெடுத்துரைப்பான்
மைத்துனனே மைத்துனனே மங்கையட்டியெங்கேயென்றான்
ஏலுமிச்சம்வர்ணமான யிளங்கொடியாளெங்கேயென்றான்
பவளநிறமுடைய பத்தினியாளெங்கேயென்றான்
என்றகாசிராஜனுக்கு எடுத்துரைப்பான்நல்லதம்பி
விருந்தன்னைசெத்துமச்சான் வெகுகாலமாச்சுதப்பா
அப்போதுகாசிராஜன் அடவாகவேதுசொல்வான்
பெண்சாதிபோனாற்போனாள் பிள்ளைகளெங்கேயப்பா
அப்போதுநல்லதம்பி பறியவெடுத்துரைப்பான்
சேய்களிறந்துபோய் சேனநாளாச்சுதப்பா
அப்போதுமன்னவனும் மைத்துனனுக்கேதுசொல்வான்
ஒன்றிரண்டுமாண்டாலும் உலகத்திலுள்ளபடி
ஏழுபிள்ளைமாண்டவிதம் எனக்கறியச்சொல்லுமென்றான்
அந்தவுரைகேட்டு ஆணழகன்நல்லதம்பி
மர்மமொளியாமல் மைத்துனருக்கேதுசொல்வான்
வந்தாளேநல்லதங்காள் மக்களுந்தானுமாக
காட்டிலேகண்டுநான் வீட்டுக்குப்போங்களென்றேன்
எந்தனுரைப்படியே யிளங்கொடியாள்வீடுவந்தாள்
புத்திரருந்தானுமாகப் பொற்கொடியாள்வந்தாளென்று
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
செய்தகொடுமையாலே செல்வவதிபிள்ளைகளும்
கோபம்பொறுக்காமல் குதித்தார்கள்பொய்கையிலே
அந்தவிசேஷம் அறிந்துநானோடிவந்து
மாண்டவரைத்தானெடுத்து மயானச்சுடலையிலே
மூளியலங்காரி மூதேவிசனைகளை
தங்கைபழிக்காக தகுந்தபழிவாங்கிவிட்டேன்
மக்கள்பழிக்காக மனையாளைக்கொன்றுவிட்டேன்
நானிறந்துமடியாமல் இருந்தேனுனக்காக
என்றவுரைகேட்டு ஏங்கிமனந்தளர்ந்து
பிள்ளைக்குகாட்சியாய் பெண்கொண்டுவாராமல்
கலியாணம்செய்துநான் கண்குளிரப்பாராமல்
செல்வரைப்பார்க்கிலும்நான் சீமையாளப்போறேனோ
மைந்தரைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனோ
என்றுமேகாசிராஜன் இனியில்லாதுக்கமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
அப்போதுநல்லதம்பி அதிகவிசனமுடன்
தங்கையைப்பார்க்கிலும்நான் தரணியாளப்போறேனோ
மைத்துனனைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனோ
என்றுமவன்நல்லதம்பி இனியாருக்கோபமுடன்

கட்டாரிகட்டுமவன் கடுகமடிந்தானே
இந்தவிதமாக இவர்கள்மடிந்திருக்க

நல்லதங்காள் நல்லதம்பி காசிராஜன் ஏழுபிள்ளைகள்
இறந்திருப்பதைக்கண்டு பார்வதிபரமசிவன்வந்து
எழுப்புகிறது.

பார்வதிதேவியற்குப் பார்க்கமுடியாமல்போகவில்லை
பரமசிவனுக்கும பார்க்கமுடியாமல்போகவில்லை
ஈஸ்வரனுமீஸ்வரியும் இரக்கமுடன் தானெழுந்து
இடபவாகனமேறி இன்பமுடனப்பொழுது
கைலாயம்விட்டுமவர் கடுகப்பயணமதாய
கப்பரையிற்றண்ணீர்கொண்டு கையில்பிரம்புகொண்டு
கையிலபிரம்பெடுத்து கப்பரையிலஜலமெடுத்து
செத்தவர்கள்தனைமேலே சீராய்தெளிப்பதற்கு
பார்வதிதேவியரும பரமசிவனாரும்
கைலாயம்விட்டல்லவோ கடுகவழிதாண்டி
ஆறுசுனைதாண்டி யதிகவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி இவர்களும்வந்தார்கள்
பாழுங்கிணற்றருகே பரமசிவன்வந்து
இருண்டகிணற்றருகே ஈஸ்வரியும்வந்துநின்று
ஏழுபிள்ளைநல்லதங்காள் இறந்துகிடப்பவர்மேல்
தண்ணீரைத்தானதெளித்து தட்டியெழுப்பினார்கள்
அப்போதூங்கியெழுந்தவர்போல் சுகமாயெழுந்தார்கள்
ஏழுபிள்ளைநல்லதங்காள் எழுந்துமேதானும்வந்தாள்
மச்சானும்மச்சானும் அச்சமில்லாதெழுந்தார்கள்
ஏழுபிள்ளைதானுமப்போ எழுந்திருந்துவந்தார்கள்
அப்போதுநல்லதங்காள் அறிவையெடுத்துரைப்பாள்
அரகராமகாதேவா அந்திவண்ணாபரசுபாணி
எனக்குள்நிறைந்துநின்ற ஏகபரஞ்சுடரே
என்தாயேபார்வதியே என்னையாளவந்தாயே
எங்களையெழுப்பிவைத்த ஏகபராபரியே
உங்கள்தெரிசனங்கண்டுளளமெலலாம்பூரித்தோம்
எங்கட்குக்காடசிதர யின்பமுடன்வந்தீர்கள்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கமாய்ப்பணிய
ஐயனாரும் அம்மனும்போய்மறைந்தார்
இப்படியிருக்க யிளங்கொடியாளேதுசொல்வாள்
பத்தாவேபத்தாவே பாராளும்பத்தாவே
உன்பேச்சைநான்கேளாமல பிழைமோசம்போனேனே
வார்த்தைநான்கேளாமல் வகைமோசம்போனேனே
பெண்புத்தியாலேயல்லோ பிழைமோசம்வந்ததென்றாள்.



பரமேஸ்வரன் பார்வதிசமேதராய் எழுந்தருளி மடிந்தவர்களை எழுப்புதல்.

தப்பாமல்வாணம்பத்தா தலையிலிடித்துதங்கே
பேய்கொண்டபாவியையநான் பிறப்பென்றுநம்பிவந்தேன்
சண்டாளவண்ணனைநான் சதமென்றுநம்பிவந்தேன்
என்னுசைகணவா நீ அன்பானவார்த்தைகேளும்
என்னைப்போல்பெண்சாதி யிவ்வுலகிற்கிட்டாதோ
வேசிகிடையாளோ வெள்ளாட்டிகிடையாளோ
தாசிகிடையாளோ தருமொருத்தியாகாதோ
நாட்டியப்பெண்களிலே நல்லபெண்கிட்டாதோ
மனையாட்டிமாண்டாளென்று மாளவிதியுனக்கேன்
பெண்சாதிமாண்டாளென்று பின்னேமடியலாமோ
எனக்காகநீமாண்டால் ஏசாதோயிவ்வுலகம்
நீமாண்டுமடிந்தாக்கால் மண்டலத்தாரென்னசொல்வார்
செத்துமடிந்தாக்கால் சீமையுள்ளாரென்னசொலவார்
எனக்காகவுன்னுயிரை ஏன்மாய்க்கவந்தீரிப்போ
என்றுமேகணவனுக்கு இயல்பாகத்தானுரைத்து
அண்ணாடா அண்ணாடா அண்ணியுடதன்வார்த்தை
கேட்டீரா அண்ணாவே கிளிமொழியாள்தன்வார்த்தை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அவளுடையதனவார்த்தை அறியவேநீர்கேளும்
நான்வருஞ்சேதிதன்னை நாயகியாள்தான்கேட்டு
ஓடிக்கதவடைத்து ஒட்டிச்சுவர்மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்து சரியாகமண்ணறைந்தாள்
பண்ணுதபாடெல்லாம் பாவிபடுத்திவைத்தாள்
அண்ணாடா அண்ணாடா ஆரணங்கையிப்பொழுது
ஆக்கினைசெய்யவேண்டாம ஆழியில்வைக்கவேண்டாம்
இவளை-கல்லிலெழுதவேணும் கண்காணநாட்டவேணும்
காரிதுப்பவேணும் கண்டார்சிரிக்கவேணும்
என்றுமேநல்லதங்காள் இயல்பாகத்தானுரைக்க
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசொலவான்
எந்தன்பிறப்பேநீ இளங்கொடியாள்நல்லதங்காள்
திக்கற்றபாவியைப்போல் தெருவிலுருண்டாயோடி
தாயற்றபாவியைப்போல் தரையிலுருண்டாயோடி
இப்போ-நானாண்டசீமையெல்லாம நீயாளவேணுமம்மா
நீயாண்டசீமையெல்லாம் நானாளவேணுமம்மா
என்றுமேநல்லதம்பி இன்பமாய்சொல்லுகையில்
அந்தமொழிகேட்டு ஆரணங்கேதுரைப்பாள்
அண்ணாடா அண்ணாடா அழகுசிகாமணியே
செத்தோரிருந்தோமானால் சீமைக்குஆகாது
இப்போ-மூளியலங்காரி மூதேவிநாயகியை
பூமியில்வைக்கவேணும் போகிறவர்கள்பார்க்கவேணும்
கல்லிலெழுதவேணும் கடுகவேநாட்டவேணும்

காரித்துப்பவேணும் கண்டார்நகைக்கவேணும்
என்றுமேதான்சொல்லி இன்பமாய்நல்லதங்காள்
அண்ணனைத்தான்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள்
என் - அண்ணாவே அண்ணாவே அன்பாகநீர்கேளும்
ஆசாரிதன்னைநீ அதிகவிரைவுடனே
அழைத்தோடிவாருமென்று அரிவையெடுத்துரைப்பாள்
அப்போதுநல்லதம்பி அதிகதுரிதமுடன்
ஆசாரிதன்னையவ னழைத்தோடிவந்தானே
ஆசாரிதன்னைப்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள்
பட்டணத்திற்கீர்த்தியுள்ள பரங்கிரிபாசாரி
எனசகு-காசியில்கோயிலொன்று கட்டிவையுமாசாரி
மாதமொருதிருநாள் மகிட்சியாய்தானடத்தும்
வருஷமொருநாட்கரு வரிசையாய்தானடத்தும்
என்றுசொல்லிநல்லதங்காள் ஏந்திழையுமப்போது
நல்லதங்காளெழுபிள்ளை நாட்டில்வன்னிமரமாகி
வன்னிமரக்கன்றாகி மாசின்றிநிற்கிறார்கள்
நினைத்தவரமளித்து நீநிலத்தில்வாழ்ந்திருக்க
மச்சானும்மச்சானும் மங்கைநல்லதங்காளை
கண்டுமகிழ்ந்திருவர் கைலாயஞ்சேர்ந்தார்கள்
சடையிற்பிறையணிந்த சங்கரனார்தன்னருளால்
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும் ஆரியரும்
நாரியருங்களிக்க நல்லதங்காள்தன்கதையை
அஷ்டதிசைபுகழ அச்சிலிதைதானியற்ற
கற்றோரும்மற்றோரும் களிப்பாய்ப்படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல சுத்தப்பிரதியதாய்
தப்பிதங்களைத்திருத்தி தன்னலியன்றமட்டும்
நலமாகப்பதிப்பித்தார் நற்றமிழ்விலாசம்பிரஸில்
ஆல்போற்றழைத்து அறுகுபோல்வேரோடி
பால்போலருசிக்க பாரிலெமிகத்தான்வாழி
மூங்கில்போலன்னைசுற்றம் முசியாமல்தான்வாழி
ஓங்கியநாலுவேத முயிராபலவுந்தான்வாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

நல்லதங்காள்கதை முற்றிற்று.